INITHU INITHU
Monthly Magazine

# இனிது இனிது

பல்சுவை மாத இதழ்

இனிமை I சுவை 3

ஓகஸ்ற் 15 – செப்ரெம்பர் 15.2011

50/=



சமாதானத்தை இசைக்கும்

## பியானோ

இனப்பிரச்சினைத் தீர்வு :

## சிக்கல்களிலிருந்து நம்பிக்கை துளிர்விடாது!

## தெய்வத்திருமகன் ஆங்கிலப்படத்தின் தழுவலா?



உங்கள் இல்லங்களை
வண்ணமயமாக்க..
NIPPOLAC
PAINTS
லக்சுமி ஒகனைஷேசன்
Lukshmee Organization
(வட மாகாண விநியோகஸ்தர்)
255. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




எண்ணங்களில்
அலை மோதும்
வண்ணங்கள்..
saree . salwar . kids wear & all cosmetics
சரவணா ரெக்ஸ்
770. 772. கே.கே.எஸ் வீதி
(தட்டாதெருச் சந்தி)
யாழ்ப்பாணம்.
TP & Fax : 021 222 0421
526. 529. பருத்தித்துறை வீதி
நல்லூர் (பின் வீதி)
யாழ்ப்பாணம்.
TP : 021 222 1723

"அறிவை இனிதாய்ப் பகிர்ந்து
அகத்தில் உறவை வளர்ப்போம்"

## பகிர்தல்

### கருத்து வெளிப்பாட்டுக்கெதிரான வன்முறை!

உதயன் பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளரான ஞா.குகநாதன் தாக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்குப் பின்னர் உயிர் பிழைத்திருக்கின்றார்.

போர் முடிவிற்கு வந்துவிட்டது, பயங்கரவாதம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது எனக் கூறிக்கொண்டாலும் வன்முறைகள் இன்னும் குறைந்தபாடில்லை. இந்த வன்முறைத் தாக்குதல்களுக்கு ஊடகவியலாளர்களும் ஆளாகின்றனர். கருத்துக்களை துணிச்சலுடன் முன்வைப்பதாலேயே அவர்கள் குறிவைக்கப்படுகின்றனர்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் நாடு முழுவதும் கொலை, கடத்தல் சம்பவங்கள் மோசமான முறையில் நடைபெற்று வந்தன. இச்சம்பவங்களால் ஊடகவியலாளர்களும் கணிசமாகப் பாதிக்கப்பட்டனர். தமிழ் ஊடகவியளர்கள் மட்டுமல்லாமல் சிங்கள ஊடகவியலாளர்களும் கொலை செய்யப் பட்ட, கடத்தப்பட்ட, காயப்படுத்தப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

கடத்திச்செல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் சிலரைக் இன்னமும் கண்டு பிடிக்க முடியாமலுள்ளது. கொலை செய்யப்பட்டவர் களுக்கு காரணமானவர்களையும் கண்டு பிடிக்க முடியாமலுள்ளது. வழக்குகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன.

கருத்துக்களை கருத்துக்களால் வெல்வதற்குப் பதிலாக கருத்து வெளிப்பாட்டாளர்களை இல்லாமல் செய்யும் பாரம்பரியம் ஒன்று நாட்டில் வேகமாக வளர்ச்சிபெற்று வருகின்றது. இவ்வாறான அச் சுறுத்தல்கள் தொடர்கின்றபோதும் நாட்டிலுள்ள ஊடகவிய லாளர்கள் மௌனமாக இருந்து விடவில்லை. அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தியே வருகின்றனர்.

கருத்து வெளிப்பாட்டாளர்களை இல்லாமல் செய்வதன் மூலம் கருத்து வெளிப்பாடுகளை இல்லாமல் செய்து விட முடியாது. கருத்துக்கள், விமர்சனங்கள் என்பன எவ்வகையிலேனும் வெளிப் படுத்தப்பட்டே வரும்.

இந்நிலையில், கருத்து வெளிப்பாட்டாளர்கள் மீது வன்முறைக ளைப் பிரயோகிக்கும் செயற்பாடுகளைக் களைய அனைத்துத்தரப் பினரும் முன்வரவேண்டும். இவ்வன்முறைகளுக்கு எதிராக உரத்துக் குரலெழுப்ப வேண்டும்.

அன்புடன்
ஆசிரியர்

02



22




24



46













எது எப்படியானாலும் குடும்பத்துடன் சேர்ந்து பார்க்கக்கூடிய நல்ல திரைப்படம்.

அடிதடி, சாகசம், காதல் ஆகியவற்றின் கூட்டாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் திரைப்படங்கள் மத்தியில் இவற்றைக் கடந்து சில நல்ல படங்களும் வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன. அப்படி ஒரு நல்ல படம்தான் தெய்வத் திருமகன். கலையம்சம் என்கிற தரத்திலும் அதே வேளையில் வியாபாரத்திலும் இத்திரைப்படம் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்படத்தினூடாக வித்தியாசமான இயக்குநராக தன்னை இனங்காட்டியுள்ளார் விஜய்.

மனவளர்ச்சி குன்றியவராக தனது நடிப்பில் முத்திரைப் பதித்துள்ளார் விக்ரம். விக்ரமிற்கும் அவரது காதல் மனைவிக்கும் பெண்குழந்தை ஒன்று பிறக்கின்றது. குழந்தையைப் பெற்றுவிட்டு தாய் இறந்து விடுகின்றாள். மனநிலை குன்றிய தந்தை அப்பெண் குழந்தைக்கு நிலா என்று பெயரிட்டு வளர்க்கின்றார். குழந்தைக்கு ஐந்து வயதாகும் போது பிரச்சினை தொடங்குகின்றது. தந்தை மனவளர்ச்சி குன்றியவர் என்பதைக் காரணம் காட்டி நிலாவை அவரின் மாமனார் தந்தையிடமிருந்து பிரித்துக்

கொண்டு சென்று விடுகின்றார். குழந்தைப் பாசத்தால் ஏங்கியலையும் தந்தையான விக்ர மிற்கு உதவ முன்வருகின்றார் வழக்கறிஞர் அனுஷ்கா. கவர்ச்சி காட்டி வந்த அனுஷ்கா இப்படத்தில் நடிப்பைக்காட்டியிருக்கின்றார். அதற்கான சந்தர்ப்பத்தை இயக்குநர் அவருக்கு வழங்கியிருக்கின்றார். குழந்தை நட்சத்திரம் சாராவின் நடிப்பு அபாரம்.

நாசர், அமலா பால், எம்.எஸ்.பாஸ்கர், சச்சின் கடேக்கர், கிருஸ்ணகுமார், வை.ஜி. மகேந்திரன் ஆகியோரும் சிறப்பாக தங்களது பாத்திரங்களை செய்திருக்கின்றனர்.

ந.முத்துக்குமாரின் பாடல்களுக்கு ஜி.வி.பிரகாஷ் அமைத்திருக்கும் இசை மற்றும், பின்னணி இசை, நீரோவ் ஷாவின்

# தெய்வத்திருமகன்

# I am Sam








## ஆங்கிலப்படத்தின் தழுவலா?

ஒளிப்பதிவு, அன்ரனியின் படத் தொகுப்பு ஆகியனவும் படத்திற்கு உயிர்ப்பூட்டியிருக்கின்றன.

மனவளர்ச்சி குன்றியவரால் குழந்தையை வளர்க்க முடியாது என்று கூறும் சட்டத்திற்கும் தந்தைப் பாசத்திற்குமிடையில் பாசம் வெற்றிகொள்கின்றது. படத்தைப் பார்த்து விட்டு இரசிகர்கள் அழுத முகங்களுடன் திரையரங்குகளிலிருந்து வருவதையும் பார்க்க முடிகின்றது.

இது ஒரு புறமிருக்க, தெய்வத்திருமகன் படம் இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்ற ஆங்கிலத் திரைப்படமான **I am Sam** இன் தழுவல் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. **I am Sam** படத்தைப் பார்த்தவர்களும் அவ்வாறே உள்ளதாகக் கூறுகின்றனர். இயக்குநர் நாகரிகம் கருதி 'டைட்டிலில்', அதனைக் குறிப்பிட்டிருக்கலாம். அத்தோடு படத்தின் பெயர் தெய்வத்திருமகளா? திருமகனா? என்பதிலும் குழப்பம் இருக்கிறது. எது எப்படியானாலும் குடும்பத்துடன் சேர்ந்து பார்க்கக்கூடிய நல்ல திரைப்படம்.

# காதலும் நட்பும்.



என்னிடம் இருந்த
ஒரு இதயத்தையும்
பறித்துக் கொண்டது காதல்!
எனக்காக
ஒரு இதயத்தையே
பரிசளித்தது நட்பு!

கஸ்டங்களில்
யோசித்தது காதல்!
யோசிக்காமல்
கைகொடுத்தது நட்பு!

துயரங்களை நோக்கி
இழுத்துச் சென்றது காதல்!
உயரங்ளை நோக்கி
அழைத்துச் சென்றது நட்பு!

கட்டுப்பாடுகளை
தளர்த்த முயற்சித்தது காதல்!
கடமைகளை
உணர்த்த முயற்சித்தது நட்பு!

என் இலட்சியங்களை
கனவாக்கியது காதல்!
என் கனவுகளை
இலட்சியமாக்கியது நட்பு!
காயம் தரும்
காதல் வேண்டாம்!
நன்மைதரும்
நட்பைக்கொடு இறைவா!

# மனம் விட்டு...

புதிதாக வெளியாகி எம்மை யெல்லாம் ஈர்ந்து வியக்க வைக்கும் இனிதே! சகல ஆக்கங்களும் தரத்திலும் இனிதே! உனது வளர்ச்சியில் எம்மையும் பங்களிக்கத் தூண்டுகிறது. 'இனிது இனிது' மென்மேலும் வளரவும் பணி தொடரவும் எனது வாழ்த்துக்கள்.

வி.கீர்த்தனா
மானிப்பாய்

'இனிது இனிது' சஞ்சிகை மலையகப்பகுதிகளிலும் கிடைக்கச் செய்வீர்களா? கொழும்பு சென்ற போது வாங்கினேன். தரமான ஆக்கங்களுடன் பொழுதுபோக்கிற்கான அம்சங்களும் அதில் வெளியானது வரவேற்கத் தக்கது. இச்சஞ்சிகையின் தரத்தைத் தொடர்ந்தும் பேணுங்கள்.

மு.இராமகிஸ்ணன்
கட்டுகஸ்தொட்ட
கண்டி

காட்சி ஊடகங்களோடு பொழுது போக்கும் இக்காலத்தில் என்னை மிகவும் இரசிக்க வைத்த அச்சு ஊடகம் 'இனிது இனிது' தான் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு விதமான விடயங்கள். அனைத்தும் தெரிந்து கொள்ள வேண்டியவை. இனிய விடயங்களைத் தாங்கி வரும் 'இனிது இனிது' தொடர்ந்து வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வீ.தனுசியா
கொக்குவில்

லிபிய ஜனாதிபதி கடாபியின் நல்ல பக்கங்களை வெளிச்சமிட்டுக் காட்டிய துகடாபி தொடர்பாக வெளியாகியிருந்த கட்டுரை. வாசகர்களுக்குத் தேவையான அனைத்து ரகமான ஆக்கங்களையும் பிரசுரித்து வருகின்றமை குறித்து 'இனிது இனிது' இதழுக்கு நன்றி.

எஸ்.சிறீஸ்கந்தராஜா
வவுனியா

கவிதைகள் பொருத்தமான ஓவியங்களுடன் பிரசுரிக்கப்படுகின்றன. அத்துடன் 'இனிது இனிது' சஞ்சிகையில் கவிதைகள் அதிகம் வெளியாவது நல்லது. வாசகர்களின் கவிதைகளையும் வெளியிடுவீர்களா? கவிதை, கதைகளை அதிகம் பிரசுரிக்கவும்.

ம.நிர்மலன்
கொடிகாமம்.



■ சுரேஸ் குமார் இந்திரஜித்



நவீன தமிழ் சிறுகதை எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர். இவரது கதைக்கரு கதை சொல்லும் விதம் என்பன வித்தியாசமானவை

# விரிந்த

இவ்வளவு பெண்கள் விரிந்த கூந்தலுடன் இருப்பது அவனுக்குத் திகிலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பெண்கள் விரிந்த கூந்தலுடன் உட்கார்ந்திருந்தார்கள். நின்று கொண்டிருந்தார்கள். நடந்து கொண்டிருந்தார்கள். பலர் நனைந்த ஆடைகளுடன் இருந்தார்கள். அருவி, பிரம்மாண்டமான தோற்றத்துடன் இருந்தது. சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ஆண்கள் நீர்வீழ்ச்சியில், பாறையுடன் தேனடை போல அப்பியிருந்தனர். மிகவும் குறுகிய ஒரு நீர் வீழ்ச்சியில் (ஒரு நபர் மட்டுமே நிற்கலாம்) வரிசையாய்ப் பெண்கள் நின்று தலையையும், உடலையும் நனைத்து வெளியேறிக் கொண்டிருந்தனர். நிற்கும் ஒவ்வொரு பெண்ணின் தலையிலும் நீர் விழுந்து முகத்திலும் உடலிலும் வழித்து ஓடிக்கொண்டிருந்தது. விழும் நீரினூடே தெரியும் முகங்கள் தூய்மையடைந்து மின்னிக்கொண்டிருந்தன. அவனின் கண்ணெதிரே பிருஷ்டம் வரை மறைந்த நீண்டு விரிந்த கூந்தலுடன் ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள்.

இந்த இடத்திற்கு வந்ததிலிருந்து விரிந்த கூந்தல் ஏற்படுத்தும் தொந்தரவுகளை, அவன் தன் நண்பரிடம் அவருக்கு விளங்கியும், விளங்காத வகையிலும் கூறிக்கொண்டு தானிருக்கிறான். விரித்த கூந்தலுடன் நான்கு பெண்கள் தங்கள் ஆடவர்களுடன் அவனைக் கடந்து சென்றனர். சாலையோரத்தில் குஷ்டரோகி ஒருவன், காசு விழுந்த தகர டப்பாவை ஆட்டி ஓசையை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். பாறையில் அமர்ந்திருந்த ஒரு குரங்கு எதையோ நக்கிக் கொண்டிருந்தது. அவன், தன் நண்பரிடம் விரித்த கூந்தல் ஒரு குறியீடு போலத் தன்னைத் துரத்திக் கொண்டிருப்பதாகக் கூறினான். எல்லாம் நீங்கள் பாவித்துக் கொள்வதுதான் என்று நண்பர் கூறினார். விரிந்த கூந்தல் கோபத்தையும், பிடிவாதத்தையும் காட்டுகிறது என்றான் அவன். இருவரும் நடந்து ஒரு அடர்த்தியான மர நிழலின் கீழ் இருந்த பாறையில் அமர்ந்தனர்.

நண்பர், அவனிடம் அவளைத் தற்போது அடிக்கடி சந்தித்ததுண்டா என்று கேட்டார். சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்றும், அபூர்வமாகச் சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அவன் பதில் கூறினான். அவளின் மண வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது, அது மிகவும் கடினமானது, இந்தப் பாறையைப் போல்

தன்னுடைய பிடிவாதத்தால் அவள் தன் மண வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொண்டாள். அவளின் பிடிவாதம் அவளின் கணவனைச் சில எல்லைகளுக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. பிடிவாதம் ஏற்படுத்தும் சினம் அவளிடமிருந்து பல வகைகளில் வெளிப்பட்டு அவரின் பிடிவாதம் மேலும் உறுதியாகிறது என்றே தோன்றுகிறது என்றான். தொடர்ந்து இருவரும் மௌனமாய் அமர்ந்திருந்தனர். அவளின் கைவிரல்களும், கால்களும், கழுத்தும், முகத்தின் பக்கவாட்டுத் தோற்றமும் மிகவும் அழகானவை. அவள் மெலிந்திருந்ததைக் கண்டு, அதை அவன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினான். அந்தச் சந்தர்ப்பத்தின் தொடர்ச்சியான ஒரு நிகழ்வில் தான் அவள் முதன்முதலாக மணவாழ்க்கை பற்றி அறிவதாகக்

# கூந்தல்



கூறியிருந்தாள். அன்று இரவில், இன்றுதான் தனக்கு முதன் முதலாக மணமானதாகக் கூறினாள். அவளுக்கும் அவளின் கணவனுக்கும் இடையே உள்ள தாம்பத்ய உறவு அவளின் பிடிவாதத்தினால் இவ்விதமாகவே இருந்தது.

நண்பர் விரித்த கூந்தல் உங்களைத் துரத்துவதாக நினைப்பது ஏன்? என்று கேட்டார். அவன் ஒன்றும் கூறவில்லை. நண்பருக்கு அவ்வப்போது அவன் கூறும் விசயங்களிலிருந்து ஏதோ ஒரு வகையில் கோர்வைப்படுத்த முடிந்தாலும் பல விசயங்கள் புரிபடாமல் யுக வெளியில் தன்னை வந்து அழைத்துச் செல்வதாகத் தோன்றியது. மலைமேல் இருக்கும் ஒரு அருவியைக் காண எண்ணி இருவரும் எழுந்து நடந்தனர். சிகரெட் பற்ற வைத்துக்கொண்டனர். சாலைக்குச் சென்று அங்கிருந்து பிரியும் மலைப் பாதையில் செல்ல வேண்டும். ரோட்டில் சென்று கொண்டிருக்கும் போது பாழடைந்த ஒரு தேரின் அருகே தரையில் அலங்கோலமான ஆடைகளுடன் இளவயதுப்பெண் அமர்ந்திருந்தாள். தலையில் கலர் காகிதங்களை பூப் போலச் சொருகியிருந்தாள். அவனுக்கு தன் மனதில் அவள் உருவம் ஓர் இடம்பிடிக்க முயல்வதாகத் தோன்றியது. இவன் உதற, உதற அவள் உருவம் தடுமாற்றமின்றி சகஜமாக நுழைவதாகத் தோன்றியது. நண்பர் அந்தப் பெண்ணைக் கவனித்திருந்தாரா என்பதும், அவனுக்குத் தெரியவில்லை. அவரிடம் விசாரித்தால் அப்போதுதான் அவர் கவனத்துக்கே வருவதாக இருக்குமோ என்று தோன்றியதால் அவன் மௌனமாகவே நடந்து வந்தான். மலைப்பாதையின் இருபுறமும் உயரமான மரங்கள் வினோதமான வடிவங்களில் இருந்தன. சம தளமற்ற பிரதேசங்களில் இஸ்டத்திற்கு அழகாக வளர்ந்திருந்தன. மரங்களினூடே ஒரு பெண் மறைந்திருந்து தோன்றினால் நன்றாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. மற்ற



ஆண்களின் வாழ்க்கையும் இவ்விதமாகவே இருக்குமோ என்ற சந்தேகமும் அவனுக்குத் தோன்றியது.

பின்னோக்கிப் பார்க்கையில் இரண்டு பெண்கள் வலை விரித்துத் தான் சிக்கிக் கொண்டதை நினைவு கூர்ந்தான். அவள் கூட ஒரு தடவை நீங்கள் என்னிடம் சிக்கிவிட்டீர்கள் என்று

தன்னிச்சையாக கூறியிருந்தாள். ஆனால் தற்போதுள்ள மனோரீதியான உறவு இதையெல்லாம் பொருட்படுத்த இயலாத வகையில் மிகவும் சீரியசாக வளர்ந்துவிட்டது. பால்ய காலத்தின் தன் மனம் தன்னிச்சையாக நாடிய ஒரு பெண்ணுக்கும், தனக்கும் ஸ்தூலமாய் உறவு ஏதும் நிகழவில்லை என்பதை அவன் இப்போது நினைத்துக் கொண்டான். அப்பெண்ணிடம் தன் மனம் கொண்டிருந்த உறவு களங்கமற்றது என்று தோன்றிய அதே நேரத்தில், தான் அப்போது ஒரு அப்பாவி என்றும் தோன்றியது. மரங்களினூடே அப்பெண்ணின் முகம் தெரியுமானால் சந்தோசமாக இருக்குமென்று அவன் நினைத்துக் கொண்டான். இந்த எண்ணம் தோன்றியவுடன் தேர் அருகில் பார்த்த பெண்ணின் முகம் மரங்களினூடே தோன்றி மறைந்தது. எதிரே வந்த ஒரு குடும்பத்தினர் அவர்களைக் கடக்க சென்றபோது டி.வி. மகாபாரதம் என்ற வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. இது டி.வியில் மகாபாரதம் திரையிடும் நேரமா? என்று நண்பரிடம் கேட்டான். நண்பர் வாட்சைப் பார்த்துவிட்டு ஆமாம் என்றார். அதைத் தொடர்ந்து சிந்தனையில் திடீரென்று அவனுக்கு ஒன்று தோன்றியது. அது அவனுக்குப் புதிதாகவும் இந்த இடத்தில் வந்ததிலிருந்து இதுவரை தோன்றாத விசயமாகவும் தோன்றியது. எப்படி தனக்குத் தோன்றாமல் போனது என்று ஆச்சரியம் அடைந்தான். விரித்த கூந்தல் தொந்தரவு தருவதற்கான காரணம் விளங்கிவிட்டது போலவும் தோன்றியது. திரௌபதியின் விரித்த கூந்தல் நினைவுக்கு வந்ததே அவன் தெளிவுக்கு காரணம். ஒரு ஆஸ்திரேலியருக்கோ, ஓர் அமெரிக்கருக்கோ விரிந்த கூந்தல் இவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அவனுக்குத் தோன்றியது. இந்திய மரபின் பின்னணியில் தன்னையறியாது நம் மனதில் விரிந்த கூந்தல் தொந்தரவு ஏற்படுத்தியது போலும் என்று அவன் நினத்துக் கொண்டான்.

தற்போது தன் மனம் லேசாகிவிட்டது போல் அவனுக்குத் தோன்றியது. உற்சாகத்துடன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நடந்தான். அவனும் நண்பரும் ஏதேதோ அளவளாவிக் கொண்டு அருவியை அடைந்தனர். சுற்றிலும் உயரமான மரங்கள் அமைந்திருந்த ஒரு பெரிய பாறையின் தலையிலிருந்து நீர் விழுந்து பாறைகளினூடே ஓடையாக ஓடிக்கொண்டிருந்தது. ஆண்களும் பெண்களுமாக மூன்று நான்கு குடும்பத்தினர் குளித்துக் கொண்டிருந்தார்கள். பெண்களின் விரிந்த கூந்தலை சாதாரணமாகப் பார்த்துக் கொண்ருந்தான். நண்பர் குளித்து முடித்து ஆடையணிந்த சற்று நேரத்தில் பசி எடுக்கவே இருவரும் கீழே இறங்க ஆரம்பித்தனர்.

வழியில் சென்று கொண்டிருந்த இரண்டு விரிந்த கூந்தலை இருவரும் கடந்து சென்றனர். மலைப் பாதை முடிந்து சாலையை அடைந்தனர். சாலையில் சென்று கொண்டிருக்கும் போது, தேருக்கு எதிர்ப்புறம் உள்ள திருமண மண்டபத்திலிருந்து நாதஸ்வர இசை ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் தேர்ப்பக்கம் பார்வையைச் செலுத்தினான். தேரின் அருகில் ஏற்கனவே இருந்த இடத் தில் அந்தப் பெண்ணைக் காணோம். நன்றாகப் பார்த்த போது பெரிய சக்கரங்களுக்கு இடையே தேரின் அடியில் அந்தப் பெண் காய்ந்த மாலையை கழுத்தில் அணிந்து கொண்டு, ஒரு காலை மடித்து, மறு காலை குத்துக் காலிட்டு மணமகள் போல் அமர்ந்திருந்ததைக் கண்டான். சாலையில் தென்பட்ட பெண்களின் விரிந்த கூந்தல் அவனுக்கு இப்போது பயத்தை ஏற்படுத்தியது.



## சிந்தனைத் துளிகள்..

- வேலை செய்வதே சோகத்தை வெல்ல வழி.. கண்ணீர் விடாது நம்பிக்கையுடன் வேலை செய்தவனே துர்நாற்றம் பிடித்த காடுகளை அழித்து, அழகான வயல்வெளிகளையும், பிரமாண்டமான நகரங்களையும் உருவாக்கினான்.

- உடலில் உள்ள நேர்மறையான நிலையை, வேலை செய்யும் சக்தியை, தைரியத்தை வெற்றி தந்திருக்கிறது. வெற்றி வரவில்லையே என்று நாம் கவலைப்படக்கூடாது,மேலும் ரோஜாக்கள் வேண்டுமென்றால் நாம் மேலும் பல செடிகளை நடவேண்டும், இதுவே வெற்றிக்கு வழி.


PRESS
09/08/2011
ஊடக சுதந்திரம்

■ விகிர்தன்



## இனப்பிரச்சினைத் தீர்வு.

# சிக்கல்களிலிருந்து நம்பிக்கை துளிர் விடாது!

பல வருடகால இனச்சிக்கல்களுக்கு ஓர் தீர்வைக் காண வேண்டுமானால் அதற்கு முன்னதாக அதற்கான நல்ல சுழல் ஒன்று உருவாக்கப்படுதல் அவசியமானது. இனங்களுக்கிடையிலான கசப்புணர்வுகள், அவநம்பிக்கைகள் என்பன முதலில் களையப்பட வேண்டும். தந்திரோபாயங்களற்ற, மூடுமந்திரங்களற்ற. வெளிப்படையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது தமிழ் மக்கள் மனங்களில் நம்பிக்கைத் துளிர்விட ஆரம்பிக்கும்.

ஆனால், இன்றைய நிலைமைகள் அவ்வாறானதாக இல்லை. நிலைமைகளை மேலும் சிக்கலாக்கும் விதமான கருத்துக்கள், செயற்பாடுகள் என்பனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போர் முடிவுற்றதன் பின்னர் தமிழ் மக்களின் மனங்களில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் இன்னமும் ஆற்றப்படவில்லை. அவை உட்காயங்களாகவே இருக்கின்றன. மாற்றங்கள் என்பது வாழ்விலோ வரலாற்றிலோ இன்றியமையாத ஒன்று. அவ்வாறான மாற்றங்களுக்கு களம் அமைக்க வேண்டியவர்கள் ஆள்பவாகள் தாம். அவர்களிடமே அதிகாரங்கள் யாவும் குவிந்து கிடக்கின்றன.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நடந்தவற்றை மறப்பதற்கும், மன்னிப்பதற்கும, புதியதோர் பண்பாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும் என்னென்ன மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை சரியாக ஆராய்ந்து, திட்டமிட்டு அவற்றை முன்னெடுத்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அரசாங்கத்திற்கு தாராளமாகவே கிட்டியிருந்தது. ஆனால், எவையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இனி மேலும் அவை கவனத்தில் எடுக்கப்படும் என்கின்ற நம்பிக்கையும் தமிழ் மக்களிடம் இல்லை.

சுதந்திரமடைந்ததற்கு பிறகு இந்த நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்கள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்பன நல்ல அனுபவப் பாடங்கள். இப்பாடங்களிலிருந்து எவையும் கற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. 58, 77, 83ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட பாரிய இனக்கலவரங்களுடன் மேலும் பல கலவரங்களை இந்த நாடு கண்டிருக்கின்றது. இவையே இந்த நாட்டில் சிறுபான்மைஇன இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்க வழி வகுத்தன. ஆயதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அது தோன்றியதற்கான காரணிகள் இன்னமும் தோற்கடிக்கப்படவில்லை.

போர் முடிவிற்கு வந்து இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப் பட்டு வரும் நிலையில், புதிய வாழ்க் கைக்குத் திரும்பியுள்ள மக்களுக்கான ஆற்றுப்படுத்தல் அவசிய மானதாக வுள்ளது. சகவாழ்வு, - நல்லிணக்கம், அதிகாரப்பகிர்வு என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்களாக அமைவது பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆற்ற உதவாது.







சமீப காலமாக ஆளும் தரப்பி லிருந்து வெளிப்படுத்தப்படும் கருத் துக்கள் இருக்கின்ற சிக்கல்களை மேலும் சிக்கலாக்கி வருகின்றது. இந் நாட்டில் தேசியகீதம் சிங்கள மொழி யில் மட்டுமே பாடப்பட வேண்டும் என்கிற சர்ச்சையிலிருந்து தற்போது யாழ்ப்பாண தோதல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பதி லிருந்து ஆறாக குறைக்கப்படுமென வெளியாகியுள்ள கருத்து வரை நாளுக்கு நாள் இனப்பிரச்சினை விவகாரம் மோசமான சிக்க லுக்குள்ளேயே சென்று கொண்டிருக்கின்றது. சிக்கல்களிலி ருந்து ஒருபோதும் நம்பிக்கை துளிர்விடாது.

இந்நிலையில் எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் பயணிப்பது?

நடந்து முடிந்துள்ள உள்ராட்சி சபைகளுக்கான தோதல் தமிழ் மக்களின் மனநிலையின் வெளிப்பாடாகவே அமைந் துள்ளது. யாழ்.மாவட்டத்தில் 48 சத வீதமானவர்கள் வாக்க ளிப்பில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். போரினால் பாதிக் கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் 65சதவீதமானவர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். அம்மக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் தங்களின் புனர்வாழ்விற் காகவும், அபிவிருத்திக்காகவும் காத்திருப்பவர்கள். உண்மை யில் அவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களித்தி ருக்க வேண்டும். ஏன் அவ்வாறு நடக்கவில்லை?

அபிவிருத்திப்பணிகள், இலவசங்கள், வாக்குறுதிகள் ஒருபுறம் நடைபெற, இன்னொரு பக்கத்தில் அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் என்பன மக்களை வெறுப்பேற்றின. நடந்து முடிந்தவற்றிற்கு பதில்கள், பரிகாரங்கள் தேவை என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் இத்தேர்தல் முடிவு வெளிப்படுத்தியுள்ளது.


தமிழ் தேசியக்கூட்டமைப்பு இன உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மக்களைத் திசை திருப்பியது என்று முன்வைக்கப்படுகின்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மக்கள் அளித்திருக்கின்ற வாக்குகள் உண்மையில் ஒரு கட்சி மீதிருக்கும் அபிமானத்தால் ஏற்பட்டதல்ல என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

இன்று தமிழ் மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மீது அதிக பொறுப்புக்களையும், கடமைகளையும் சுமத்தியிருக் கின்றார்கள். மக்களின் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்பிற்குமாக அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டிய கடப்பாடு அக்கட் சிக்கு உள்ளது. 'தேசியம்' என்பதை மந்திரச்சொல்லாக தொடர்ந்தும் உச்சரித்துக்கொண்டிருக்க முடியாது. தேசி ஹுத்திற்கான வேலைத்திட்டங்கள் நடை முறைப்படுத்தப் படல் வேண்டும்.


தேசியவாதம் குறித்து விமர்சனங்கள் இருந்தாலும் ஒரு பெரும் தேசியவாதம் சிறுபான்மைத் தேசியத்தை விழுங்க முற்படும் போது, குறித்த சிறுபான்மைஇனம் தமது தேசியவா தத்தை முன்னிறுத்திச் செயற்படுவது யதார்த்தமானதும் தவிர்க்க இயலாததுமாகும்.

தீர்வு குறித்து அரசாங்கத்துடனான பேச்சுக்கள் காலத்தை மேலும் கடத்திச் செல்வதாக அமையாமலிருக்க கூட்ட மைப்பு சரியான திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும். நடந்து முடிந்த பத்தாவது சுற்றுப் பேச்சுக்களின் போது கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் மறுத்துள்ளமையை அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கூட்டமைப்பினர் தீவிரமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

# புற்றுநோய்



## சில பயன்மிக்கத் தகவல்கள்.



நீண்ட காலமாக புற்று நோய்க்கு (cancer) கீமொதெரபி (chemotherapy) சிகிச்சை மட்டுமே உள்ளது என்பதை மறுத்து அதற்கு மாற்று வழி உள்ளது என்பதை ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் (Johns hopkins) சொல்கிறார். புற்றுநோய் பற்றி அவர் இவ்வாறு சொல்கிறார்.

1) ஒவ்வொரு மனிதனின் உடம்பிலும் புற்று நோய் செல்கள் உள்ளன, அது சாதாரண பரிசோதனையில் தெரியவராது, அவை சில பில்லியன் செல்களாக பெருக்கம் ஆன பின்புதான் தெரியவரும். புற்றுநோய் சிகிச்சைக்குப் பின், மருத்துவர் நோயாளியின் உடம்பில் புற்றுநோய் இல்லை என்று சொன்னால், இதற்கு உண்மையான அர்த்தம் சோதனையால் அந்த உடம்பில் உள்ள புற்றுநோய் செல் கண்டுபிடிக்கும் படியான எண்ணிக்கையில் இல்லை என்று மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும்.

2) ஒரு மனிதனின் வாழ்நாளில் 6 முதல் 10 க்கு மேற்பட்ட முறை புற்றுநோய்க்கான செல் உருவாகிறது.

3) ஒரு மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தி (Immune system) வலுவாக இருக்கும்போது புற்றுநோய்க்கான செல் அழிக்கப்பட்டு, பெருக்கம் அடைவதற்கான வாய்ப்பும் தடுக்கப்பட்டு, 'டியூமர்' (Tumors) ஏற்படுவதற்கான வாய்ப்பும் தடுக்கப்படுகிறது.

4) ஒருவருக்கு புற்றுநோய் இருக்கிறது என்றால் அவருக்கு பலவிதமான சத்துக் குறைபாடு உள்ளது என்பது அர்த்தமாகிறது. இதற்கு மரபு, சுற்றுச்சூழல், உணவு மற்றும் வாழ்க்கை முறை என்பன காரணிகளாகின்றன.

5) சிறப்பான உணவு கட்டுப்பாட்டின் மூலம் நாம் இந்த ஊட்டச் சத்து குறைப்பாட்டை நீக்கலாம். தேவையான சத்துள்ள உணவின் மூலமாக நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப் படுத்திக் கொள்ளலாம்.

6) கீமொதெரபி சிகிச்சை வேகமாக வளர்ந்து வரும் புற்றுநோய் செல்களை மட்டுமல்லாமல், எலும்பு, இரைப்பை போன்றவற்றில் வளரும் ஆரோக்கியமான செல்களையும் அழித்து விடுகிறது. மேலும் குடல், சிறுநீரகம், இதயம், மூச்சுக் குழல் போன்ற பல உறுப்புகளையும் பாதிக்கிறது.

7) புற்றுநோய் செல்லை அழிக்கும் கதிர் வீச்சானது (Radiation) ஆரோக்கியமான செல்கள், உறுப்புகள், திசுக்கள் போன்றவற்றை

எரித்தும், வடுக்கள் ஏற்படுத்தியும் அழிக்கிறது.

8) ஆரம்பகால கீமொதெரபி மற்றும் கதிர் வீச்சு சிகிச்சை புற்றுநோய் கட்டியின் (Tumor) அளவைக் குறைக்கச் செய்கிறது. எனினும் நீண்டகால கீமொதெரபி மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை புற்றுநோய்க் கட்டியினை அழிக்க பெரும்பாலும் உதவுவதில்லை.


9) கீமொதெரபி மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையினால் உடம்பில் வளரும் நச்சு மூலம் நோய் எதிர்ப்பு சக்தியானது அதற்கு ஏற்றால் போல் சமரசம் செய்து கொள்ளும் அல்லது அழிக்கப்பட்டுவிடும். இதனால் மனிதனுக்கு பலவிதமான பிரச்சனைகளும், நோய்களும் ஏற்படும்.

10) கீமொதெரபி மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையினால் புற்றுநோய் செல்கள் எதிர்ப்பு சக்தி பெற்று நாளடைவில் அழிக்க முடியாமல் போய்விடுகிறது. அறுவை சிகிச்சையும் புற்றுநோய் செல்கள் மற்ற இடங்களில் பரவ ஒரு காரணமாகி விடுகிறது.

11) புற்றுநோயை எதிர்த்துப் போராடச் சிறந்த வழியானது, புற்றுநோய் செல்கள் பெருக்கம் ஆகக் கூடிய உணவுகளை நாம் உண்ணாமல் தவிர்ப்பதே ஆகும்.

12) இறைச்சியில் உள்ள புரதமானது ஜீரணிக்க கடினமாகவும், ஜீரணமாக அதிக நேரமும் எடுத்துக் கொள்கிறது. மேலும் ஜீரணமாக அதிக செரிமான நொதித் தேவைப்படுகிறது. ஜீரணமாகாத இறைச்சியானது குடலில் தங்கி அழுகி, மெதுவாக நஞ்சாகிவிடுகிறது.

13) புற்றுநோய் செல்லின் சுவரானது கடினமான புரதத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே, இறைச்சி சாப்பிடுவதை தவிர்ப்பது அல்லது குறைத்துக் கொள்வதால், நொதியமானது (Enzyms) தனது சக்தியை புற்றுநோய் செல்லின் கடினமான



## மருத்துவம்

சுவரைத் தாக்கி, உடலின் அழிக்கும் செல்லானது புற்றுநோய் செல்லை அழிக்க உதவியாகிறது.

14) IP6, Florsence, Essiac, anti-oxidants, Vitamins, Minerals, EFAsetc, போன்றவை நோய் எதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்தி, உடலின் அழிக்கும் செல்கள் மூலம் புற்றுநோய் செல்களை அழிக்க உதவி செய்கிறது. விட்டமின் E போன்றவை உடலில் உள்ள பாதிக்கப்பட்ட, தேவையற்ற செல்களை நீக்கும் முறையை ஊக்குவிக்கிறது.


புற்றுநோய் என்பது மனம், உடல் மற்றும் ஆன்மாவின் நோயே! நேர்மறையான, ஆரோக்கியமான எண்ணங்கள் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் வல்லமையை அளிக்கிறது. கோபம், மன்னிக்கும் மனமின்மை, எதிர்மறையான எண்ணங்கள் போன்றவை மன அழுத்தத்தையும், உடலின் அமிலத்தன்மையையும் அதிகரிக்கிறது எனவே மன்னிக்கும் குணத்தையும், அன்பு செலுத்தவும்,

ஆசுவாசப்படுத்திக்கொள்ளவும், வாழ்க்கையை அனுபவிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்!

16) ஒக்சிஜென் மிகுந்த சூழ்நிலையில் புற்றுநோய் செல்லானது வளர வாய்ப்பில்லை. தினமும் உடற்பயிற்சி, ஆழ்ந்த சுவாசம் போன்றவை உடலின் செல்களுக்கு நிறைய ஒக்சிஜென் கிடைக்க உதவுகிறது. மூச்சுப் பயிற்சியானது உடலில் உள்ள புற்றுநோய் செல்களை அழிக்க உதவுகிறது.

உடலில் புற்றுநோய் செல் வளர காரணிகள்..

1) புற்றுநோய் செல்லுக்கு சர்க்கரை ஒரு நல்ல உணவு. எனவே சர்க்கரையை தவிர்ப்பது புற்றுநோய் செல்லுக்கு தேவையான ஒரு முக்கிய உணவை நிறுத்துவது போன்றது. சர்க்கரைக்கு மாற்றாக உள்ள Nutrasweet, Equal, Spoonful செயற்கை இனிப்பு வகைகள் போன்றவையும் Aspartame எனும் அமிலத்தால் தயாரிக்கப்படுவதால் இவையும் பாதிப்பானாதே! எனவே குறைந்த அளவில் தேன், மொலஸஸ், போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். Table



saltல் வெள்ளை நிறத்திற்காக இரசாயனம் சேர்ப்பதால் இதற்கு மாற்றாக Braggis amino or sea salt போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

*2)* பால் உடலில் சளியை உற்பத்தி செய்கிறது, குறிப்பாக இரைப்பை குடல் பகுதியில் சளியால் புற்றுநோய் செல் நன்கு வளரும். எனவே பாலுக்கு மாற்றாக இனிப்பில்லாத சோயாப் பாலை எடுத்துக் கொள்வதன் மூலம், புற்றுநோய் செல் பெருக்கத்தைக் குறைக்கலாம்.

*3)* அமிலத்தன்மையில் புற்றுநோய் செல் நன்கு வளரும். இறைச்சி சம்பந்தமான உணவுகள் அமிலத் தன்மைவாய்ந்தது. எனவே ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக்குப் பதிலாக மீன், குறைந்த அளவு சிக்கன் போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். இறைச்சியானது பிராணிகளின் ஹோர்மோன் ஒட்டுண்ணிகள், அன்டிபயாடிக்ஸ் போன்றவற்றை கொண்டுள்ளது, இது மிகவும் ஆபத்தானது..

*4)* ஒரு சிறந்த உணவு என்பது *80* வீதம் காய்கறிகள், பழச்சாறு, முழுத்தானியங்கள், விதைகள், பருப்புகள் மேலும் சிறிதளவு பழங்கள் உடலை நல்ல காரத்தன்மையில் வைத்திருக்கிறது. 20வீதம் சமைத்த உணவாக இருக்கலாம், 'பீன் சையும்' சேர்த்து. காய்கறிகள் பழச்சாறு உயிரோட்டமுள்ள நொதிகளை அளிக்கிறது, இவை *15* நிமிடங்களில் நன்கு உறிஞ்சப்பட்டு, ஊட்டச்சத்து அளித்து நல்ல செல்கள் வளர உதவுகிறது. ஆரோக்கியமான செல்கள் வளர உதவும் உயிரோட்டமுள்ள நொதிகளைப் பெற காய்கறிகள் பழச்சாறு மற்றும் ஒரு நாளைக்கு *2* அல்லது *3* முறை பச்சை காய்கறிகள் எடுத்துக் கொள்ளவும்! நொதிகள் *104* (Degrees F) *(40* Degrees C) வெப்பத்தில் அழிந்து போய் விடுகிறது.

*5)* தேனீர், கோப்பி, சொக்லெட் போன்றவற்றில் அதிகளவு 'காஃபீன் ' உள்ளதால் இவைகளைத் தவிர்த்து விடவும். இதற்கு மாற்றாக கிறீன் டீ (Greentea) எடுத்துக் கொள்ளவும்! இதில் புற்றுநோய் செல்களை எதிர்க்கக் கூடிய ஆற்றல் உள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரை மட்டுமே அருந்தவும். நச்சு மற்றும் உலோகக் கலவை அதிகமுள்ள குழாய் நீரைத் தவிர்த்து விடவும். கண்டிப்பாக இந்த தகவல்கள் உங்களுக்கு பயனுள்ளவையாக இருக்கும்.



விதவை முகம் பார்க்கிறாள்
கண்ணாடியில்

ஒட்டுப் பொட்டு

•

அமாவாசை நாளில்
நிலவு

எதிர் வீட்டுச் சன்னலில்

•

கடல் கரைக்கு
அனுப்பும் காதல் கடிதம்

அலைகள்...

•

கண்ணாடியைத் துடைக்கத் துடைக்க
என் முகத்தின் அழுக்கு

மேலும் தெளிவாகிறது



# சவால்

ஊருக்குள்ளை அவர் பெரிய சண்டியன். சண்டியன் என்றாலும் நன்மையான விடயங்களுக்குத் தான் சண்டை போடுவான். ஊர்க்குமர்ப்பிள்ளையளுடன் யாரும் சேட்டை விட்டால் பொங்கி எழுவான். வாங்கு வாங்கென்று வாங்கி விடுவான். அவனுக்கு ஒரு தங்கச்சி மிக மிக அழகானவள். தமையனின் குணமறிந்து அவளைப் பற்றி ஒருவரும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. அவ்வளவு பயம். ஒரு நாள் ஏதோ பேச்சோடு பேச்சாக அவளின் பெயரும் வந்தது. "ச்..ச்" என்று எச்சரித்தான் எழிலன்.அந்தப் பேச்சே வேண்டாம்" என்றான் அகிலன்."முதுகு முறிபடும்" என்றான் முரளி. "தமையனைத் தெரியாதோ?'' என்றான் குமணன்."அவர் பெரிய ஆளோ?" என்று பொரிந்து தள்ளினேன் நான். அனைவரும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். "ஆயிரம் பந்தயம்.நீ அவளோடை ஒருக்காற் கதைக்கிறீரோ..?" என்றான் முரளி. "அவளோடை எனக்கென்ன கதை..? அவ பெரிய ஆளே?" இது நான். "பயந்திட்டார் பயந்திட்டார்" கைகொட்டிக் கேலி செய்தனர் எல்லோரும் சேர்ந்து. தலை குனிவாக இருந்தது. ஏதோ முடிவுக்கு வந்தவனாக,

''வேணுமென்றால் அவளுக்கு கண் அடிக்கிறன். .. தமையன் ஏதும் செய்யிறதெண்டால் செய்து பார்க்கட்டும்" என்றேன். "இதில் ஏதோ திருகுதாளம் இருக்குது அவள் உன்னைப் பார்க்காமல் இருக்கேக்கை கண் சிமிட்டினால் அவளுக்குத் தெரியாது தமையனிடம் சொல்ல மாட்டாள் தானே". என்றான் எழிலன்.

"..சீஆயிரம் ரூபா தாறதெண்டால் சொல்லு, இல்லாட்டில் போ அவள் பார்க்கேக்கை கண் அடிக்கிறன். "சலஞ்ச்" சவால் விட்டேன் நான். தூரத்தில் நின்று கண் அடிப்பீர் அப்ப அவளுக்குத் தெரியாது தப்பிவிடுவீர் இது அகிலன். இல்லை..கச்சேரி பஸ்ஸால வந்து, இறங்கி, 764 றுட் பஸ்ஸிலை திருநெல்வேலிக்கு அவள் பஸ் எடுக்க நிக்கேக்கை அடுத்த றோவில அருகில் நின்று, அவள் என்னைப் பார்க்கேக்கை கண்அடிக்கிறன்..."அறுத்து உறுத்துச் சொன்னேன். ஆயிரம் ரூபா பெறத் துணிந்து கூறினேன்.

எனக்கு முதுகு முறியிறது பார்க்க அவர்களுக்கு ஆசை.. சரி..சனி ஞாயிறு கடந்து, திங்கட்கிழமை, கச்சேரி முடிந்து, வந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலை, பின்னேரம், நாலு நாலரை மணிக்கு, திருநெல்வேலிக்கு பலாலி பஸ்ஸிற்குக் காவல் நிற்கேக்கை, அவளுக்குக் கண் அடிக்கவேண்டும் ஒப்பந்தம் பூர்த்தியாகியது.

திங்கட் கிழமை. நேரத்திற்கு யாழ் 764 பஸ் தரிப்பு நிலையத் தில் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தோம். நேரம் 3.45 ஐ நெருங்க, அவர்கள் 1000 ரூபாவை எடுத்து எனது கரங்களில் திணித்தனர்.. அவர்களுக்கு ஆயிரம் ரூபா போனாலும் பரவாயில்லை நான் ஒரு நாலைந்து நாளுக்கு ஆஸ்ப்பத்திரியிலை இருக்க வேண்டுமென்று ஆசை. மணி 3.50 ஆக மெல்ல மெல்ல விலகினர். முனிசிபாலிடி டாடா குறும் பஸ் வந்து நிற்க அதிலிருந்து அவள் இறங்கி வந்தாள். இன்னும் 764 கொண்டு வந்து அடிக்கவில்லை. நான் நின்ற கியூவில். அவளும் அருகில். மிக மிக அருகே திசைக்கொருவராக தூரத்தில் நின்று என்னையே வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தது நண்பர் குழாம். சேட் பொக்கற்றுள் கை விட்டேன் ஆயிரம் ரூபா. லோங்ஸ் பொக்கற் உள் கை விட்டேன். கை லேஞ்சி வந்தது. வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டேன். என்னையே பார்த்துக் கொண்டு நிக்கிறாங்கள். அவள் எனது பக்கம் திரும்பிய போது, லோங்ஸ் மற்றப் பொக்கற்றுள் கை விட்டேன். அதனுள் கறுப்பு நிற கூலிங் கிளாஸ் பக்குவமாகச் சுற்றப்பட்டிருந்தது எடுத்துக் கண்ணுக்கு மாட்டினேன்.. அவள் இன்னும் எனது பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவங்களும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர்கள், மெதுவாகத் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு, தலையைக் கீழே தொங்கப் போட்டுக்கொண்டு நடையைக் கட்டத் தொடங்கினர். எனது நீண்ட நாள் ஆசையும் நிறைவேறியது. அருகில் நின்று, அவள் என்னைப் பார்த்தபோது, அவளைப் பார்த்து ஆசை தீரக் கண் அடித்தேன்.

■ அரியாலையூர் செ.செல்வதாஸன்.

# பனை மரக்கூடல்கள்



ஒரு காலத்தில் எங்கும் பரந்து கிடந்த பனை மரக் கூடல்கள் தான் யாழ். குடாநாட்டுக் கிராமங்களின் தனித்துவமான அடையாளத்தை இனங்காட்டின. உயர்ந்த கரும்பனைகள். அவற்றின் உச்சியில் சட சடக்கும் பச்சைப்பனையோலைகளும், கல கலக்கும் காவோலைகளும் பனைமரக் கூடல்கள் என்ற பெயரை அவற்றுக்குப் பொறித்து விட்டன. ஆனால், அவற்றின் கீழ் முளைவிட்டு வளரும் வடலிகளும், எங்கும் பரந்து கிடக்கும் காரை முட்செடிகளும், சில இடங்களில் காணப் படும் ஈச்சம் பற்றைகளும் அவற்றினூடாக வளைந்த பக்க வேலிகளும், அவற்றால் அடைக் கப்பட்ட காணிகளுக்குள் மண்ணால் அமைக்கப்பட்டு பனையோலையால் வேயப்பட்ட வீடுளும் சாட்சியளிக்கும், இன்னொரு புறம். செம்மண் தோட்ட வெளிகளில் உப உணவுப்பயிர்களும் புகையிலை போன்றனவும் நிமிர்ந்து நிற்கும். இவற்றுடன் இணைந்து பனமரக் கூடல்களும் எழுந்து நிற்கும்.

இப்போது பெருமளவு பனைமரக்கூடல்கள் காணாமற்போய் அந்த இடத்தில் கல் வீடுகள் எழுந்து விட்டன. எனினும், அவை ஒரு காலத்தில் சுமந்து நின்ற கதைகள் என்றுமே பசுமையானவை நினைத்து நினைத்து ஆனந்தப் படக்கூடியவை.

காதலர்களின் சொர்க்கமாக நாம் கடற்கரையையும், பூங்காக்களையும் கதைகளிலும், சினிமாப் படங்களிலும் பார்ப்பதுண்டு. இப்போதெல்லாம் இரவு விடுதிகளும் அந்த சொர்க்கங்களுக்குச் சொந்தம் கொண்டாடத் தொடங்கி விட்டன.

■ விஸ்ணுபுத்திரன்

ஆனால், அந்நாட்களில் இப்பனைமரக் கூடல்கள் காதலரின் உண்மையான சொர்க்கபுரிகளாக விளங்கின. அங்கு கட்டிப்பிடித்தலோ, கலைத்து விளையாடுதலோ, ஒருவர் நெஞ்சில் ஒருவர் சாய்வதோ கிடையாது. அது மட்டுமல்ல ஒருவரிடம் ஒருவர் நின்று கதைப்பது கூடக் கிடையாது.

அதென்ன அப்படி ஒரு காதல் என இன்றைய தலைமுறை கேள்வி எழுப்பலாம்.! அங்கு காதல் இருந்தது. அது அழகான அற்புதமான புனிதமான இரு மனங்கள் சங்கமித்து விட்ட அற்புதக் காதல்.

அவள் வரும் நேரத்துக்காக பனைமரக்கூடலின் ஒரு கரையில் அவன் தன் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டு நிற்பான். அவனின் கண்களோ பனைமரங்களுக்கிடையில் தொலைதூரத்தில் உலாவிக் கொண்டிருக்கும். நெசவுச்சாலைகளிலிருந்தோ உறவினர் வீட்டிலிருந்தோ திரும்பும் அவள் பனைமரக் கூடலுக்குள் இறங்கி வர அவனின் சைக்கிள் பறக்க ஆரம்பித்து விடும். தூரத்தில் அவனைக் கண்டதும் அவளின் தலை குனிந்து விடும்.

அவன் எதிரெதிராக அருகில் வரும் போது அவளின் தலை ஒரு முறை நிமிரும். முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை. மீண்டும் அவளின் தலை குனிந்து விட அவள் வேகமாக நடக்க ஆரம்பித்து விடுவாள். சில சமயங்களில் அவனின் கையிலிருந்து ஒரு மடிக்கப்பட்ட கடிதம் நிலத்தில் விழும். அவள் ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்து விட்டு எடுத்து சட்டைக்குள் வைத்து விட்டு நடக்க ஆரம்பித்து விடுவாள்.

இது தான் அந்நாட்களின் காதலின் உச்சக்கட்டம்.இப்படியான மௌனமான அழகிய காதல் மெல்லக் கசிந்து யாராவது ஒரு ஊர்ப்பெரியவரின் காதை அடைந்து விட்டால் நிலைமை அடுத்த கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்து விடும். அவர் பெண்ணின் தந்தையையோ, தாயையோ அழைத்து "பெட்டை குணம் கொண்டிட்டாள் போல கிடக்குது பார்த்து ஏதோ நேர காலத்துக்கு செய்து வை" என்று ஆலோசனை கூறிவிடுவார். பிறகு அந்த பனையோலை வேலிக்குள் கத்தல்கள்,அடி உதைகள், மிரட்டல்கள் அழுகைகள் எனப் பல கைங்காரியங்கள் நிறைவேற ஆரம்பித்து விடும்.

எல்லாம் நிறைவேறி சில காதல்கள் கலியாணத்திலும் முடியும். வேறு சில ஒருவருக்கு கட்டாயத் திருமணம் செய்து வைப்பதிலும் முடியும். சில பெண்களின் நிலை தற்கொலையிலும் முடிவதுண்டு. இவற்றை விட ஒன்றிரண்டு வித்தியாசமான வழிகளில் நிறைவேறுவதுமுண்டு.

அதாவது காதலன் காரில் இரவில் ஒழுங்கை முகப்பில் காத்திருக்க, காதலி வேலிப் பொட்டுக் கால் புகுந்து வந்து சேர, அவர்கள் இரவோடு இரவாக வன்னியில் ஏதோ ஒரு தொலைதூர கிராமத்துக்குச் சென்று தங்கள் வாழ்வை ஆரம்பித்து விடுவார்கள்.



அந்த நாட்களில் வீடு வேய கூலிக்கு ஆட்களைப் பிடிப்பதில்லை. அயலவர்கள் சேர்ந்தே அதை மேற் கொள்வார்கள். அனைவருக்கும் காலை உணவாக 'தோசை' வழங்கப்படும்.

பெண்ணின் தந்தையோ அவள் இறந்து விட்டதாக அவளுக்கு கீரிமலை சென்று அந்தியேட்டி செய்து தலை முழுகி வந்து விடுவார். தாய் இரகசியமாக கண்ணீர் விடுவதுமுண்டு. அந்தியேட்டி செய்யாமல் கைகழுவி விட்டவர்கள் தம்பதிகளுக்கு முதல் பிள்ளை பிறந்த பிறகு மெல்ல மெல்லச் சேர்த்துக் கொள்வதுமுண்டு.

ஆனால்,இப்படியான காதல்கள் சாதி மாறி வந்து விட்டதால் அது காதலர் குடும்பங்களின் அளவில் நின்று விடுவதில்லை. சாதிச்சண்டை, கத்தி வெட்டு, துவக்குச்சூடு, நீதிமன்ற வழக்குகள் எனப் பெரும் பூகம்பத்தையே ஏற்படுத்தி விடுவதுண்டு.

இப்படியாக இந்த பனைமரக் கூடல்கள் ஏராளமான காதல்

கதைகளைக் கொண்டிருந்தன. அந்த ஒற்றையடிப் பாதைகள் போல் காதல்கள் அழகாகவும் ஒழுங் காகவும் இருந்தாலும் அந்த காரை முட்செடிக ளைப் போல் இரத்தம் சிந்தும் சம்பவங்களையும் உருவாக்கி விடுவதுண்டு.

எனினும் இவற்றுக்கு அப்பாலும் இப்பனங் கூடல்களுக்குப் பல மகத்துவங்கள் உண்டு.பனம் பழக்காலம் வந்தால் கொசுக்களின் சாம்ராஜ்யம் ஆரம்பித்துவிடும். பெண்களின் உறக்கமும் போய் விடும். இரவில் படுத்திருந்தவாறே பனங்காய் விழும் ஒலியைக் கேட்டு எழுந்து பனங்காய்களின் ஒலியை எண்ணிக்கொண்டிருப்பார்கள். அதி காலையில் எழுந்து நார்க்கடகப்பெட்டியில் காரை முட்செடிகளுக்குள் தேடிப் பனம்பழங் களை எடுத்து விடுவார்கள். விழுந்த பழங்களின் அளவை விட எண்ணிக்கை குறைந்திருந்தால் அடுத்த காணிக் காரியுடன் போடும் சண்டையில் ஊரே விழித் தெழும். இப்படிச் சேகரிக்கப்படும் பனம் பழங்கள் பனாட்டாக மாறுவது ஒரு அதி உயர்தொழில் நுட்பம் என்றே சொல்ல வேண்டும்.

இப்பனம்பழங்கள் தோலுரிக் கப்பட்டு தனித் தனி விதைகளாக் கப்பட்டு சிறிது நீர் விட்டு வாளி யில் ஊறவிடப்படும். சிறிது நேரத் தின் இப்பனை விதைகள் பிணை யப்பட்டு அவற்றிலிருந்து கழி எடுக்கப்படும்.

அங்கே பினாட்டுப் பந்தல் என்ற பேரில் ஒரு தட்டைப் பந் தல் போடப்படும். அதில் ஒரு பெரிய பனம் பாய் விரிக்கப்பட்டு அதன் மேல் பனங்கழி தடவி விடப்படும். ஒவ்வொரு நாளும் பூசப்படும் கழி காய்ந்தால் அதன் மேல் மீண்டும் மீண்டும் பனங் கழி பூசப்படும். ஒரு குறிப் பிட்ட அளவு வந்தவுடன் அப் பெரும் பனாட்டு தட்டை துண்டு துண்டாக வெட்டப் பட்டு பாயிலிருந்து பிரிந்து எடுக்கப்படும். பின் அவை தேவையான அனுமானங்கள் சேர்த்து மண் பானையில் ஊற வைக்கப்படும்.

பின்பு அது பாணிப்பனாட்டு என்ற பெயர் பெற்று ஒரு நேர உணவாகப் பயன்படுமளவுக்கு உயர்வு பெற்று விடும். அந்த நாட்களில் பழம் சோற்றுடன் பாணிப்பனாட்டு கடித்து உண்பதில் உள்ள ருசி பற்றி பெரியவர்கள் விபரிக்கும் போதே கேட்பவர்களுக்கு வாய் ஊறும்.

பனங்கழி பிழியப்பட்ட விதைகள் கூட வீணாக்கப்படுவதில்லை. 'பாத்தி' என்ற பெயரில் இரண்டு அடி உயர மண்பிட்டி அடுக்கப்பட்டு அதன் மேல் பனம் விதைகள் அடுக்கப்பட்டு மண் ணால் மூடப்படும். அவை நாளாக வேர் விட்டு கிழங்காக வளரும்.உரிய காலம் வந்ததும் பாத்தி ஒரு பக்கத்தால் வெட்டப்பட்டு கிழங்குகள் எடுக் கப்படும்.



**அந்நாட்களில் இப்பனைமரக் கூடல்கள் காதலரின் உண்மையான சொர்க்கபுரிகளாக விளங்கின. அங்கு கட்டிப்பிடித்தலோ, கலைத்து விளையாடுதலோ, ஒருவர் நெஞ்சில் ஒருவர் சாய் வதோ கிடையாது**

அவை தோலுரித்துக் காயப் போட்டு ஒடியலாக்கப்படும். பின் அது உரலில் போட்டு இடிக்கப் பட்டு மாவாக்கப்பட்டு 'பிட்டு' அவிக்கப்படும். பழைய ஒடியல் பிட்டை திருவலகையில் துருவி கத்தரிக்காய் பழைய குழம்பும் தயிரும் விட்டுக் குழைத்துச் சாப் பிடுவதற்கு நிகர் வேறு எதுவுமே இருக்க முடியாது என்று கூறுவார் கள்.

இதை அவித்துக் காயப் போட்டு புளுக் கொடியலாகச் சாப்பிடுவதுண்டு. சிங்கள மக்கள் இதை மிகவும் விரும்பிச் சாப்பிடு வார்கள் மக்களின் குடியி ருப்பு விடயங்களிலும் இப்பனை மரக் கூடல்களின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. வேலி, கூரை போன்ற தேவை களுக்கு அந்நாட்களில் பனை யோலையே பயன்படுவதுண்டு.

ஓலை வெட்டு என்பது ஒரு முக்கியமான நிகழ்வாகும். மூன்று, நான்கு சீவல் தொழிலாளர்கள் ஒரு பனைமரக்

கூடல்களுக்குள் புகுந்து விட்டால் ஓலைகள் வரிசையாக வெட்டி விழுத்தப்படும். ஓலைகள் வெட்டிய பின்பு பனைமரங்களைப் பார்த்தால் நீண்ட நாட்களின் பின் தலைமயிர் வெட்டிய இளைஞர்களின் தோற்றம் தான் நினைவுக்கு வரும்.

இந்த ஓலைகள் சற்றுக்காய விடப்பட்டு 'பாடம்' போடப்படும். ஒன்றின் மேலொன்றாக வரிசையாக அடுக்கப்படும். இவை வளைந்து நெளிந்து செல்லும் ஒரு சாரைப்பாம்பை ஒத்திருக்கும். சில நாட்களில் இவை பிரிந்தெடுக்கப்பட்டு கரம் போடப்படும். கரம் என்பது வைக்கோல் சூட்டின் ஒரு வட்டக் கோபுரம் போல் அமைந்திருக்கும். அவை பிரிந்தெடுக்கப்படும் போது வீடு வேயவோ வேலியடைக்கவோ தகுதி பெற்று விடும்.

அந்த நாட்களில் வீடு வேய கூலிக்கு ஆட்களைப் பிடிப்பதில்லை. அயலவர்கள் சேர்ந்தே அதை மேற் கொள்வார்கள். அனைவருக்கும் காலை உணவாக 'தோசை' வழங்கப்படும்.

இப்போதெல்லாம் எங்கள் பனையோலை வேலிகள் காணாமல் போய்விட சுற்றுமதில்களும் கிடுகு வேலிகளும் அந்த இடத்தை ஆக்கிரமித்து வீடுகளைச் சுற்றி அழகிய பனையோலை வேலிகளை அமைத்து எங்களுக்கு நினைவூட்ட வேண்டிய அளவுக்கு நிலைமைமாறி விட்டது.

அடுப்பெரிக்கும் தேவையைக் கூட அந்நாட்களில் இந்தப்பனை மரக்கூடல்களே நிறைவேற்றின. கங்கு மட்டை, வரிந்த மட்டை, கொக்காரை, பன்னாடை, ஊமல் எனப் பல உருவங்களில் அவை எங்கள் விறகுத் தேவைகளைப் பூர்த்தி செய்தன. அதைக்கூடத் தென்னிந்திய கவிஞர் அறிவுமதி பாடல் எழுதி நினைவூட்ட வேண்டியளவுக்கு எங்களின் நிலை மாறிவிட்டது.


எல்லாவற்றையும் சொல்லி விட்டு இப்பனை மரக்கூடல்கள் வழங்கும் சோமபானமாகிய கள்ளைப் பற்றிக் கூறாவிடில் இது முழுமையடையாது.

அப்போதெல்லாம் கள்ளுத்தவறனைகளோ கூட்டுறவு அமைப்புக்களோ யாழ்ப்பாணத்தில் கிடையாது. அந்தந்த இடங்களில் கள்ளை விற்கும் உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு. அது யாழ். குடா நாட்டுக்கு மட்டும் வழங்கப்பட்ட பிரத்தியேக மரவரி முறையாகும்.

அநேகமான பனங்கூடல்களில் ஒரு வட்டக் குடில் இருக்கும் கள்ளு வியாபாரம் அங்கு நடக்கும். வீடுகளிலும் விற்பனை நடப்பதுண்டு. பனங்கள்ளு 'சீசன்' தொடங்கி விட்டால் கொழும்பில் வேலை பார்க்கும் அரச ஊழியர்கள் அடிக்கடி வர ஆரம்பித்து விடுவார்கள். அவர்களுடன் சிங்கள நண்பர்களும் வருவதுண்டு. பனங்கள்ளை பச்சைப் பிளாவில் குடித்தல், நண்டு சுடுதல், கூழ் காய்ச்சல் எனப் பனங்கூடல் புதுப்பொலிவு பெற்று விடும்.

இவ்வாறு யாழ். குடாநாட்டில் பனங்கூடல்கள் உற்பத்தி மையங்களாக மட்டுமன்றி எமது கலாசார அடையாளமாகவும் விளங்கி வந்ததை எவரும் மறுந்து விட முடியாது. இன்று பனை மரச் சோலைகள் கட்டிடக் காடுகளாகி விட்டன. அது போல் எமது பண்பாட்டின் பல அம்சங்களும் தூய்மைகெட்டு நலிவடைந்து விட்டன. எப்படியிருந்த போதிலும் பனை மரக்கூடல்கள் என்றும் வடக்கின் கலாசார அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் என்பது மட்டும் மாற்ற முடியாத ஒரு உண்மையாகும்.





# ஹைக்கூ கவிதைகள்

விதவை வானம்
மறுநாளே மறுமணம்

பிறை நிலவு

●

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன

சலூன் கண்ணாடிகள்

●

மூன்று நிமிட
மௌன அஞ்சலியில்

யாருக்கோ வாயுத் தொல்லை

●

ஆண் பிணத்தின் இடுப்பு
துணியை புரோகிதர் உருவ

கண் மூடி அழும் பெண்கள்

●

குடைக்குள் மனைவி
பேசிக்கொண்டு நடக்கிறேன்

பழைய காதலியுடன்

●

கவ்விய இரையை உண்ண
காக்கை உட்கார


மின்சாரம் கசியும் கம்பி

●


நிலவும் காதலில் தோற்றது போலும்
வானில் என்னை போல்


தனியே















# ஒபாமாவின்
## ஓய்வுப்பொழுது..

# தி ரோட் ஹோம்

# The Road Home



எளிமையான, எதிர்பார்ப்பில்லாத அன்பே காதல் எனில் அதற்கு அழிவு கிடையாது. ஒவ்வொரு ஜீவராசிக்குள்ளும் அந்தக் காதல் ஒரு தீபத்தைப் போல சுடர்ந்து கொண்டிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அதன் பிரகாசத்தைக் கண்டு கொள்ளவும், அதன் ஆத்ம சுத்தியில் கரைந்து போகவும் நம்மால் முடிவ தில்லை. சுய நலமும், பேராசையும் கொடுங்காற்றாக தீபத்தை நடுங்கச் செய்கிறது. அதன் தூய்மையைப் பேண இயலாத வண்ணம் நம் மனங்களோ தன்னலத்தின் சாம்பல் புத்து கிடக்கின்றன.

காதலின் தூய்மையை ஒரு முறை யேனும் நீங்கள் தொட்டு உணர்ந்ததுண்டா? அதன் பிரகாசத்துக்கு கண்கள் கூச தலை குனிந்த சம்பவம் நடைபெற்ற துண்டா? இல்லையெனில் 'ஷாங் யுமு வின் 'தி ரோட் ஹோம்' திரைப் படம் உங்களுக்கு நல்ல தேர்வாக இருக்கும். கடந்த ஆண்டு இத்திரைப்படம் வெளியானது. சீனாவின் பின் தங்கிய கிராமம் ஒன்றில் வசித்த இளம் பெண்ணின் காதலைச் சொல்கிறது இந்தத் திரைப்படம். சீன எழுத்தாளர் பாவோ எழுதிய Remembrance நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சீனாவில் அறிமுகமான சினிமா, அதன் முழு வீச்சை எட்ட ஏறக்குறைய என்பது





வருடங்கள் எடுத்தன. இடையில் ஏற்பட்ட கலா சார புரட்சியும், அதற்குப் பிந்தைய அரசும் கலை களை முதலாளித்துவத்துக்கான கேளிக்கையாகக் கருதி அதன் எல்லைகளை பிரசாரம் எனும் வட் டத்திற்குள் சுருக்கியது. சினிமா உட்பட அனைத்து கலைகளும் எவற்றை பிரதிபலிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டன. சோசலிஸ யதார்த்தவாதம் என்ற பெயரில் பிரசாரத் தன்மை கொண்ட படங்கள் மட்டுமே சீன அரசால் அங்கீ கரிக்கப் பட்டது.

இந்த மூச்சுத் திணறலிலிருந்து சீன சினி மாவை மீட்ட ஐந்தாம் தலைமுறை இயக்கு நர்களில் முக்கியமானவர் ஷாங் யுமு. இவர் பீக்கிங் திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவுத் துறையில் பயின்றவர். அதுவரை சீன சினி மாவில் இருந்து வந்த கட்டுப் பெட்டி யான சோசலிஸ யதார்த் தவாதத் துக்கு எதிரான தனித்துவமான தொரு கதை கூறும் முறையைத் தனது படங்களில் கையாண்டார் ஷாங்யுமு. இவரது முதல் படம் Redsorghum. இதுவரை சுமார் 18 திரைப்படங்கள் இயக் கியிருக்கும் இவரது பெரும்பா லான படங்கள் சீனாவின் விளிம்பு நிலை மனிதர்க ளைப் பற்றியது. சீன மக்களுக்கு கல்வியின் மீதிருந்த ஆர்வமும் ஒவ்வொருவருக்கும் கல்வி எட்டப் பட வேண்டும் என்ற சீன கம்யூ னிஸ்டுகளின் குரலும் இவரது படங் களில் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. பிரசாரம் விலக்கிய காட்சியமைப்புடன் என்பது குறிப் பிடத்தக்கது.

'தி ரோட் ஹோம்' படத்தின் கதை நகரத்து இளைஞனொருவனின் பார்வையில் சொல்லப்படுகிறது. கிராமத்தில் ஆசிரியராக வாழ்ந்து மறைந்த தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள நகரத்திலிருந்து கிராமத்துக்கு வருகிறான் இளைஞன். கிராமத்தில் புதிய பள்ளிக்கூடம் கட்ட நிதி திரட்டும் பணியில் இருந்த அவனது தந்தை அதற்காக வேறு கிராமத் துக்குச் சென்றபோது அங்கேயே நோய் வாய்ப் பட்டு இறந்து விடுகிறார். அவரது உடலை வாக னத்தில் வைத்து எடுத்து வருவதை கிராமத்தில் இருக்கும் அவனது தாய் தடுத்து விடுகிறாள். சீனாவின் பழைய நம்பிக்கையின்படி, இறந் தவர்களின் உடலைச் சுமந்தபடி "பயப்படா தீர்கள், இது நீங்கள் நடந்த சாலை... உங்கள் வீட்டிற்கு செல்லும் சாலைதான்" என்று சொல்லிக் கொண்டே வருவார்கள். இதனால் இறந்தவர் களின் ஆன்மா அவர்கள் வாழ்ந்த வீட்டை நினைவு வைத்துக் கொள்ளும் என்பது அவர்கள் நம்பிக்கை.



தாயின் விருப்பத்துக்கு மகன் ஒத்துக் கொள்கிறான். ஊர் மேய ரின் உதவியுடன் தந்தையின் உடலை எடுத்து வர ஏற்பாடு செய்கிறான். ஆனால், அதற்கு ஆட்கள் கிடைப்பது சிரம மாக இருக்கிறது. கிராமத்தில் உள்ள இளைஞர்கள் அதிக பணம் தரும் வேலை தேடி நகரங்களுக்குச் சென்று விட்டார்கள். அதனால் வாடகைக்கு ஆட்கள் அமர்த்தி இறந்தவர் உடலை கிராமத்துக்குக் கொண்டு வருகிறார்கள். வரும் வழி யில் அவன் தந்தையின் அருமை யைத் தெரிந்து கொள்பவர்கள் அவர் உடலைச் சுமந்து வந்த தற்கான பணத்தை வாங்க மறுத்து விடுகிறார்கள். தாயின் விருப்பப்படி இறுதிச்சடங்குகள் நடக் கின்றன. மகன் நகரத்துக்கு கிளம்பும் முன், ஒரே யொரு முறை தந்தை பாடம் நடத்திய பள்ளிக் கூடத்தில் பாடம் நடத்தும்படி மகனிடம் தாய் கேட்கிறாள். மகனும் அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறான். அதுவரை கணவனின் கம்பீரக்குரலில் ஈர்க்கப்பட்டு பள்ளிக்கு வந்தவள் அன்று மகனின் குரல் கேட்டு வருகிறாள். தாயும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள் கிறார்கள். படம் நிறைவடைகிறது.





## சமாதானத்தை இசைக்கும்

# பியானோ

**சுமார் 66 வருடங்களுக்கு முன் நடந்த கதை இது.**
**'சின்னபையன்' நிகழ்த்திய விபரீதமிது.**
**ஒரு ஜப்பானிய சிறுமியின் கண்ணீர்க் கதை இது.**



அகிகோ



ஹிரோசிமாவில் ஒரு பியானோ உள்ளது. இதன் பிறப்பிடம்/ உருவாக்கப்பட்ட இடம் அமெரிக்கா. 1920ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

சிகசோ கவமாற்றோ என்னும் ஜப்பானியப் பெண் 2005ம் ஆண்டு மார்ச் 25ம் திகதி தனது 103வது வயதில் காலமானார். அவருக்குச் சொந்தமானது தான் இந்தப் பியானோ. சிகசோ கவமாற்றோ ஜப்பானிலிருந்து அமெரிக்காவிற்கு தனது இளவயதில் சென்றாள். அக்காலத்தில் இத்தகைய பயணங்கள் மிக அரிதாகவே நிகழும். 1922ல் லொஸ் ஏஞ்சலில் கென்சிச்சி கவமற்றோ என்பவரைத் திருமணம் புரிந்தார். கென்சிச்சி தனது 101வது வயதில் இறந்தார். கென்சிச்சி தனது மனைவியை மிகவும் நேசித்தார். அவர் இன்சூரன்ஸ் தொழிலில் ஈடு பட்டிருந்தார். தான் செல்லும் இடமெல்லாம் தன் மனைவி சிகசோவையும் அழைத்துச் சென்று வந்தார். நீண்ட காலமாகப் பிள்ளைப் பாக்கியம் இன்றி இருந்தனர். அவர்களின் தனிமையைப் போக்க கென்சிச்சி அவளுக்கு ஒரு பியானோ வாங்கிக் கொடுத்தார்.


பியானோ இசையில் மூழ்கி இருந்ததால் பிள்ளைப்பாக்கியம் இல்லையே என்ற குறை ஓரளவுக்குத் தணிந்திருந்தது. அவள் திருமணமாகும் முன் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாள். திருமணமான பின் அதிலிருந்து விலக்கிக் கொண்டாள். பியானோ அவளுக்கு ஓரளவு ஆறுதலை வழங்கிக் கொண்டிருந்தது. நீண்ட காலத்தின் பின் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தைப் பாக்கியம் கிட்டியது. தேவதை ஒன்று தமது இல்லத்திற்கு வந்தது போன்று மகிழ்ச்சியில் திளைத்தனர். இது பற்றி கென்கிச்சி தானே டயரியில் குறித்துக் கொண்டதினை வாசித்துப் பாருங்கள்.



செவ்வாய்க்கிழமை மே 25,1926 லொஸ் ஏஞ்சலில் ஒரு ஜப்பானிய வைத்திய சாலையில், டாக்டர் கொசினோவின் வைத்திய பராமரிப்பில் பெண் குழந்தை பிறந்தது.

நான் அவளுக்கு அகிகோ எனப் பெயரிட்டேன். நல்ல புத்திசாலியாக அவள் இருக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்தேன். ஒகஸ்ட் 08, 1926 எனது மகள் பிறந்து இன்றுடன் 76 நாட்கள். இன்று தான் அவளை முதன்முதலில் வெளியே கொண்டு வந்தோம். மே 25,1928 அவள் இப்போது 24 மாதக் குழந்தை. 150 சொற்கள் வரையில் தெரிந்து வைத்துள்ளாள்.

மார்ச் 16, 1929 றுபிஹிற்றோ, (அகிகோவுக்குக் குட்டித்தம்பி) ஆஸ்பத்திரியிலிருந்து இன்று வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டான். அமெரிக்காவிலிருந்து இக்குடும்பம் 1932ல் ஜப்பானுக்கு வந்தது. பியானோவும்தான். கிசுகோவின் சொந்த ஊரான ஒசோ நகரில் தற்போதைக்கு குடியிருக்கத் தீர்மானித்தனர்.



அகிகோ கிரோசிமாவில் உள்ள ஜெகாகுயின் பாடசாலையில் சேர்க்கப்பட்டாள். சில வேளைகளில் பாடசாலைக்கு டக்சியில் செல்வாள். ஜப்பானுக்கு வந்த நாளிலிருந்து அவள் நாட்குறிப்பேடு ஒன்றைப் பேணத் தொடங்கினாள். வெளிநாட்டுச் சூழலில் வாழ்ந்த அவளால் ஜப்பானிய எழுத்துக்களில் இது எழுதப்பட்டு வந்தது. ஜப்பானின் விழுமியங்களை அகிகோவிற்கு புகட்டுவதில் கென்கிச்சி பின்நிற்கவில்லை. **அகிகோவின் நாட்குறிப்பிலிருந்து** – மே 25, 1934 இன்று எனது பிறந்த நாள், ரொசிசான், ஜோசிகா, மற்றும் றுபிஹிற்றோ (தம்பியார்) ஆகியோருடன் சேர்ந்து விளையாடினேன்.

செப்டெம்பர் 18, 1934. இன்று பியானோ வகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பியானோ வகுப்பு நடைபெறும் எனது தாத்தா மதியச் சாப்பாடு கொண்டு வந்து என்னை அழைத்தது கூடத் தெரியவில்லை.

செப்டெம்பர் 23, 1934. இன்று தந்தை சாப்பாடு கொண்டு வந்தார். மலை அடிவாரத்தில் இருந்து உணவு அருந்தினேன்.

1935 காலப்பகுதியில் ஹிரோசிமாவின் வடகிழக்குப் பகுதியில் பெருமளவில் வீடுகளில் பியானோ கிடையாது. சில வேளைகளில் அகிகோவும், தாயாரும் சேர்ந்து பியானோ வாசிப்பார்கள். பியானோவில் நான்கு கரங்கள் சேர்ந்து இசை எழுப்பும். உயர் படிப்பிற்குச் செல்லும் போதும் பியானோ வாசிப்பதை அவள் கைவிடவில்லை. 1942ல் யுத்தம் தொடங்கியது. 1944ல் யுத்த விமானங்களின் குண்டு வீச்சுக்களும் நிகழ்ந்தன. அகிகோ ஜோகாகுயின் கல்லூரியில் மூன்றாவது வருடக் கற்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

ஒகஸ்ற் 06, 1945, 08.15 மணிக்கு அமெரிக்க குண்டு வீச்சு விமானம், பி-29, சின்னப்பையன் என்னும் அணுகுண்டினை வீசியது. மாணவர் தயார்படுத்தற் குழுவுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்த அகிகோ இக்குண்டு வெடிப்பினால் தூக்கி வீசப்பட்டாள். காயப்பட்ட அவள் வீட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். இடையிலுள்ள பாலம் அழிவடைந்திருந்தது. ஆற்றினூடாக நீந்திச் சென்றாள். அவள் பலமிழந்து அக்கரையேறிச் சுருண்டு விழுந்தாள்.

ஆற்றின் மறுகரையில் என்ன நடக்கிறது என அவளின் தயார் சிசுகோ அறிந்திருக்கவில்லை. வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள். மேலும் அசைய முடியாத நிலையில் மலை அடிவாரத்தில் படுத்திருப்பதினை ஒரு முதியவர் வந்து கூறினார். வெளிக்காயம் ஒன்றுமில்லை. ஆனால் அணுக் கதிர்கள் ஏற்கனவே அவளின் உடலுக்குள் உள்நுழைந்திருந்தது.



ஒகஸ்ட் 07, 1948 இல் அகிகோ இறந்து விட்டாள். இறப்பதற்குக் காரணம் தீவிர அணுக் கதிர் தாக்கம். வாழ்வில் மூன்றில் ஒரு பங்கு வரையான காலம் பூர்த்தியாகிய நிலையில் தனது 17வது வயதில் அவள் வாழ்வு மிகவும் கசப்பான முறையில் பறிக்கப்பட்டுவிட்டது. அம்மா எனக்கொரு நல்ல சிவந்த தக்காளிப்பழம் ஒன்று தாருங்கள். அதுதான் அவளது வாயிலிருந்து உதிர்ந்த இறுதி வார்த்தைகள். இன்றும் இக்காலப் பகுதியில் அப்பிரதேச தக்காளிச் செடிகள் சிவந்த பழங்களைத் தந்தவண்ணமுள்ளன.

அந்தப் பியானோ தனது எஜமானியை இழந்துவிட்டது. கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அந்த உடைந்த பியானோ பாதுகாக் கப்பட்டு வருகிறது. 2005 ஒகஸ்ட் 03ம் திகதி அப்பியானோவைப் பயன்படுத்தி கிசுகோவின் கொள்ளுப் பேத்தி 10 வயதான றீயாமோற்றோ, நிதியம் ஒன்றுக்கான கலை நிகழ்வில் இசை விருந் தொன்றை வழங்கினாள். 21ம் நூற்றாண்டின் சமா தானம் பற்றிய இசை அதில் பின்னப்பட்டிருந்தது. அகிகோ ஆகிய பெண்ணும், அந்தப் பியானோ வும் அமெரிக்காவில் பிறந்தவை. சின்னப்பையன் உருவாக்கம் பெற்றதும் அமெரிக்காவில்தான்.

# நல்ல லப்டொப் ஒன்றினை தெரிவு செய்வது எப்படி?



இப்போதெல்லாம் 'லப்டொப்' இல்லாமல் வேலை செய்வதே இல்லை என்றாகிவிட்ட நிலையில், 'லப்டொப்' வாங்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களைச் சற்று காண் போம்.

முதலாவதாகக் கடையிலிருந்து 'லப்டொப்' வாங்கும் போது அறிய வேண்டிய முதல் விடயம் உத்தரவாதம் பற்றியது. பொதுவாக 'லப்டொப் கள்' ஒரு வருட உத்தரவாதத்துடன் வரும். ஆனால் இதில் கவனிக்க வேண்டியது அது வன் சைட் எனப்படும் வீட்டுக்கு வந்து செய்யும் சேவையுடன் கூடிய உத்தரவாதமா இல்லையா என்பது. இந்த விடயத்தில் பொதுவாக Dell நிறு வனம் தரும் 'வொரண்டி' மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவைகள் மிக சிறப்பாக இருக்கும். ஆனால் 'வொரண்டி' மட்டும் போதாதே, Configuration எனப்படும் திறன் உள்ளடக்கமும் சிறப்பாக இருக்க வேண்டுமல்லாவா. பொதுவாக கம்ப்யூட்டர்களின் திறனைத் தீர்மானிக்கும் முதல் விடயம் புரொசெஸ்சர்களின் (Processor) திறன்.

தற்போது I3, I4, I5 என்று உயர் திறனுள்ள புரொசெஸ்சர்கள் வந்துவிட்டன. நமது கொள்வ னவுத் திறனுக்கு ஏற்றாற்போல் இவற்றில் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம். அடுத்ததாக ராம் (Ram) எனப்படும் ராண்டம் அக்செஸ்மெமரிகள். இப் போது சாதரணமாக 3 GB முதல் 8 GB வரையுள் ளன ராம்கள் கிடைக்கின்றன. குறைந்தது 4 GB ராம் இருப்பது நல்ல வேகத்தை கம்ப்யூட்டருக்கு வழங்கும்.

பின்னர் இறுதியாக ஆனால், உறுதியாக அருகில் 'சேர்வீஸ் சென்டர் ' மற்றும் உதிரிப்பாகங்கள் எளிதில் கிடைக்ககூடிய 'லப்டொப்களை' வாங்குவது பின்னர் பிரச்சினைகளை தவிர்க்க உதவும். இதில் Dell போன்ற நிறுவனங்கள் மிக சிறப்பாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது ●

# நேரத்தில் அவதானமாக இருங்கள்



**கால** எல்லை தவறிப்போகின்றதா? கட்டுரைகள் முடங்கிக் கிடக்கின்றனவா? தலைக்கு மேல் வேலை இருப்பதாக உணர்கிறீர்களா? நேரத்தை எவ்வாறு பயனுள்ளதாக்கலாம் என்பதற்கான வழிமுறைகள் இதோ!

நேரத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அநாவசியமாக வீணடிக்கக் கூடாது. எந்த ஒரு துறையிலும் நேர முகாமைத்துவம் என்பது இன்றியமையாதது. மாணவராக இருக்கும் போது நேர முகாமைத்துவம் என்பது இன்றியமையாதது. ஆகவே நேரத்தை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம் என அறிய வேண்டும்.

மாணவராக இருக்கும் போது, நீங்கள் நேர முகாமைத்துவத்தை கடைப்பிடிப்பீர்களானால் உங்கள் வேலைகள் உங்களுக்கு சுலபமாக நிறை வேறும். உங்கள் குறிக்கோளை நீங்கள் இலகுவில் அடையலாம். நீங்கள் எவற்றில் அதிகளவு நேரத்தை செலவிடுகின்றீர்கள் என கண்டறியுங்கள். ஒரு விடயத்தைச் செய்ய ஆரம்பிக்கும் போது அது கடினமாகக் காணப்பட்டால் நாளை அதைச்செய்யலாம் என்று விட்டுவிடாதீர்கள். இன்றே முடியுமான அளவிற்கு செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். மனதில் எப்போதும் 'முடிந்தது', 'ஆம்' என்றே எண்ணுங்கள். நேர முகாமைத்துவத்தை கடைப்பிடிக்க இன்னும் சில இலகுவான வழிகள் உள்ளன. உங்கள் வேலை என்ன என்பது பற்றி ஒரு குறிப்பு எடுங்கள் அல்லது ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யவும். அது உங்கள் நோக்கத்தை அடைய இலகுவாக இருக்கும்.

நீங்கள் நேரம் வீணடிக்கப்படுவதை நிறுத்தியதன் பின்பு, ஒரு நாட்குறிப்பை பேண ஆரம்பியுங்கள். அதில் நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்கும் போது எவற்றை தவற விட்டீர்கள் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு செய்ய வேண்டியவை என்ற ஒரு பட்டியலை தயாரியுங்கள். கிழமைக்கும், அந்த மாதத்திற்கும் அவ்வாறான ஒரு பட்டியலைத் தயாரியுங்கள். உங்கள் பட்டியலில் உள்ள விடயங்களுக்கு எவற்றுக்கு முன்னுரிமைகொடுக்க வேண்டும் என்று அவதானமாக அவற்றை குறித்துக் கொள்ளுங்கள். விரைவில் நிறைவேற்ற வேண்டிய விடயங்களையும், காலம் தாழ்த்தி நிறைவேற்ற வேண்டிய விடயங்களையும் கலந்து குறித்துக் கொள்ளுங்கள். அப்போது தான், இதை இறுதியாகச் செய்து கொள்ளலாம் என்று நீங்கள் ஒதுக்கி வைக்கும் விடயங்களையும் செய்து முடிப்பீர்கள்.

இதில் இன்னொரு விடயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது, உங்கள் மூளைக்கு ஓய்வு கொடுக்க மறக்க வேண்டாம். மற்றுமொரு முக்கியமான விடயம், உங்களை நீங்களே பயிற்றுவித்துக் கொண்டு இருக்கும் போது உங்களுக்கு ஒரு ஊக்குவிப்பினைக் கொடுக்க மறக்காதீர்கள். அது உங்களுக்கு ஒரு உற்சாகமாக அமையும். மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை சமநிலையாக்குங்கள். அதாவது, மற்றவர்களுக்காகவும் நேரம் ஒதுக்குங்கள், முக்கியமாக உங்களுக்காகவும் நேரம் ஒதுக்குங்கள். அவசரமாக இயங்கிக்கொண்டு இருக்கும் போது உங்கள் மனதிற்கும் உடலிற்கும் இவ்வாறான மாறுதல்கள் அவசியமாகக் காணப்படுகின்றது.



# இமைத்தலில்லை

மானிடத்தின் நேயமிகு உணர்வுச் செம்மை
மனங்குளிரும் அன்பொளிரும் மகிழ்வுச் சோலை
தேனிடத்தே குவிந்திருக்கும் மதுவாய்த் தோயும்
தெவிட்டாத மனைமகவின் அணைப்பே இன்பம்

போரிடத்தில் தொலைந்ததென்ன மனித நேயம்?
பொய்யுரைக்குள் தொலைந்ததென்ன புனித வீரம்?
யாரிடத்தில் அழுதரற்றப் போகின்றார் மெய்
யாதுமுள நீதிவிழி இமைத்தல் இல்லை

■ நெடுந்தீவு மகேஷ்

# இனிய வார்த்தைகளைப் பேசுவோம்.

ஒருவனுடைய பண்புகளை அவனுடைய நடை, உடை, பாவனைகள் படம் பிடித்துக் காட்டுவதைப் போல் பல நேரங்களில் அவனது பேச்சுக்களும் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவனை நல்லவனாகவும், கொடியவனாகவும், மென்மையானவனாகவும், கடுமைகாட்டுபவனாகவும் பிரதிபலிக்கச் செய்யும் சக்தி அவன் பேசும் பேச்சுக்கு உண்டு. சில வேளைகளில் நாம் விளையாட்டாக சில வார்த்தைகளைக் கூறி விடுகிறோம். நாம் கூறிய பொருளை உண்மையில் நம் உள்ளத்தில் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்ளாமல் கேலிக்காகக் கூறிய போதிலும் கேட்பவர் அதை விபரீதமாக விளங்கிக் கொள்கிறார். நாம் நல்லவராக இருந்தாலும் நம்முடைய பேச்சு நம்மைத் தீயவனாகச் சித்தரித்து விடுகிறது. வார்த்தையை விட்டவர் பின்னர் நான் ஒரு பேச்சிற்காகத் தான் சொன்னேன் என்று எவ்வளவு சமாளிப்புகளைக் கூறினாலும் மனதில் பதிந்த காயம் மறையாத வடுவாகப் பதிந்து விடுகிறது.

விளையாட்டு வார்த்தைகள் பல விபரீதங்களை விதைத்து விடுகின்றன. கடுமையான வார்த்தைகள் கலகத்தை உண்டு பண்ணுகின்றன. கனிவான வார்த்தைகள் கல் நெஞ்சம் கொண்டோரையும் கனிய வைத்து விடுகிறது. ஏராளமான இன்பங்களும் துன்பங்களும் நம் பேச்சின் பயனாக வந்தமைகின்றன.

இவ்விடயங்கள் அனைத்தையும் அன்றாட வாழ்வில் நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். ஆனால் மனிதன் தனக்குள்ள அறிவை முறைகேடாகப் பயன்படுத்துவான் என்பதால், ஆன்மீகம், மதபோதனைகள் என்பனவும் அவனுக்கு இதை உணர்த்துகின்றன. இனிய வார்த்தைகளையே பேசும் படியும் பயனில்லாத பேச்சுக்களைப் பேச வேண்டாம் என்றும் தடை விதிக்கின்றது. நல்ல வார்த்தைகளால் பல நன்மைகள் நிகழும். மனம் ஒடிந்தவரிடம் ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவது அவருடைய காயத்திற்குக் களிம்பு தடவியதைப் போன்று இருக்கும். வேலையில் ஈடுபட்டு பரபரப்புடன் வருபவர்களிடம் கூறப்படும் நல்ல வார்த்தை அவர்களைச் சீரான நிலைக்குக் கொண்டு வரும். தவறு செய்தவர்களிடம் நல்ல வார்த்தைகளைக் கூறினால் அவர்கள் புனிதர்களாக மாறுவதற்கு வாய்ப்பாக அமையும். இது போன்ற ஏராளமான நன்மைகளை, நல்ல வார்த்தைகளின் மூலம் சமுதாயம் அடைகின்றது.



ஒருவன் தன்னுடைய செல்வத்தை தர்மம் செய்வதற்கு நிகரானது அவன் பேசுகின்ற நல்ல வார்த்தைகள். தீய பேச்சுக்களைப் பொதுவாக எங்கும் பேசக்கூடாது. குறிப்பாக மக்கள் நடமாடும் இடங்களில் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது மிக மோசமான செயலாகும். ஆனால் இந்த ஒழுக்கத்திற்கு மாற்றமாகப் பொது வீதிகளில் சண்டைத் தகராறுகள் ஏற்படும் போது கேட்பதற்குக் காது கூசுகின்ற அளவிற்குப் பயங்கரமான வார்த்தைகள் வீசி எறியப்படுகின்றன. சந்தோசத்திற்காக தெருக்களில் கூடியிருக்கும் இளைஞர்களிடத்திலும் இது போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் உண்டு. இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான். இதைக்கருத்தில் கொண்டு தெருக்களில் அமர்ந்திருப்போரும் நல்லதையே பேச வேண்டும்.

# மிட்ஸமர் நைட்ஸ் ட்ரீம்

**மன்னன் ஒபரான் ஒரு அழகிய வாலிபனை தன்னுடைய மெய்காப்பாளனாக அமர்த்திக் கொள்ள விரும்பினான். ஆனால் ராணி டிட்டானியாவும் அவனை தன் பணியாளனாக்க விரும்புகிறாள். சண்டையின் காரணம் இதுதான்.**



ஏதென்ஸ் நகரில் அந்தக் காலத்தில் ஒரு சட்டம் இருந்தது. நகரின் அரசன் தீஸியஸ் தம்பிரஜைகளில் யாரையும், யாருக்கும் மணம் முடித்து வைக்கும் உரிமை படைத்திருந்தான் தீஸியஸ்.


ஏகியஸ் என்பவர் தம் மகள் ஹொமியாவுடன் தீஸியசிடம் வருகிறார். தம் மகள் ஹொமியாவை டெமிற்றியஸ் என்பவருக்கு மணம் முடித்து வைக்க விரும்புகிறார் ஏகியஸ். ஆனால் அவளோ அவர் விருப்பத்தை ஏற்கவில்லை. காரணம் அவள் வேறொரு இளைஞனைக் காதலித்ததாள். தான் தேர்ந்தெடுத்துள்ளவனையே ஹொமியா மணாளனாக ஏற்க தீஸியஸ் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கோரவே எகியஸ் ஏதென்ஸ் நகருக்கு தன் மகளுடன் வந்திருந்தார். ஹொமியா டெமிற்றியஸையே மணக்க வேண்டுமென்று அரசன் உத்தரவிடுகிறார். அப்படி அவள் டெமிற்றியஸை மணக்காவிடின் கன்னிமடத்தில் சேர்ந்து சன்னியாசினியாகப் போக வேண்டும் அல்லது மரணத்தைத் தழுவ வேண்டும். இவ்விரண்டில் ஏதாவது ஒரு முடிவெடுக்க அவளுக்கு நான்கு நாட்கள் அவகாசம் அளிக்கிறார் அரசன்.

அழகி ஹொமியாவின் உள்ளத்தில் இடம் பெற்ற இளைஞனின் பெயர் லைசாண்டர். தீஸியஸ் அரசனின் அவையிலிருந்து திரும்பிய ஹொமியா தன் காதலனைச் சந்தித்து நிகழ்ந்தவைகளை அவனிடம் கூறுவதற்காக வேகமாகப் போகிறாள். ஏதென்ஸ் நகருக்கு வெளியேயுள்ள கானகத்தில் காதலர் இருவரும் கை கோர்த்தபடி நடக்கிறார்கள். ஏதென்ஸ் நகரின் எல்லைக்குள்தான் அரசனின் சட்டமும் கட்டளைகளும், செல்லுபடியாகும். கானகத்தில் சட்டம் செல்லாது. அரசனின் கட்டளையைக் காதலனுக்கு

விவரிக்கிறாள் ஹெர்மியா. முடிவில் கருத்தொருமித்த காதலர் இருவரும் தந்தை, அரசன் இருவருடைய ஆணையையும் மீறித் தம்பதிகளாகி விடுவதென்ற முடிவுடன் நகருக்குத் திரும்புகின்றனர். ஹெர்மியா தனது முடிவைத் தனது தோழி ஹெலனாவிடம் கூறுகிறாள். ஹெலனா தனது தோழியின் துணிச்சலான முடிவை டெமிற்றியஸிடம் கூறிவிடுகிறாள். ஏனென்றால் ஹெலனா டெமிற்றியஸைக் காதலிக்கிறாள். ஆனால் டெமிற்றியசோ அவளை விரும்பவில்லை. சட்டம் செயலற்றுப் போவதான கானகத்தில் தன் காதலனைச் சந்திக்க சென்றிருப்பதை அறிந்த டெமிமிற்றியஸ் ஹெர்மியாவை தேடிப் போகிறான். ஹெலனா டெமிற்றியஸைத் தொடர்கிறாள். நான்கு காதலர்களும் கானகத்துக்கு வந்து விடுகிறார்கள். அந்தக் கானகமோ மந்திர சக்தி வாய்ந்தது. டோஸ் என்னும் தேவதைகள் வாழுமிடம்.



வனதேவதைகளின் அரசன் ஒபரான் அவர் மனைவி டிட்டானியா. தேவதைகளின் அரசனும் அரசியுமான இவர்களுள் சிறு சண்டை, மனஸ்தாபம். மன்னன் ஒபரான் ஒரு அழகிய வாலிபனை தன்னுடைய மெய்காப்பாளனாக அமர்த்திக் கொள்ள விரும்பினான். ஆனால் ராணி டிட்டானியாவும் அவனை தன் பணியாளனாக்க விரும்புகிறாள். சண்டையின் காரணம் இதுதான். ஒபரான் பக் என்னும் குட்டிச்சாத்தானை அழைக்கிறார். ரொம்பக் குறும்புக்காரக் குட்டிச்சாத்தான் இந்தப் பக். ஒரு மந்திரத் தன்மைகொண்ட மலரைக் குறிப்பிடுகிறான். இம் மலரின் சாற்றை தூங்குபவர்களின் கண் இமைகளின் மீது பிழிந்தால் அவர்கள் விழித்ததும் முதலில் யாரைப் பார்க்கிறார்களோ அவர்மீது மாறாத காதல் கொண்டு விடுவர். இதுதான் அந்த மலரின் மந்திர சக்தி. ஒபரான் பக்கிடம் அந்த மந்திர மலரைக் கொண்டு வரும்படி கூறுகிறார். அதைக் கொண்டு டிட்டானியாவைத் தந்திரமாக ஏமாற்றி தன் வழிக்குக் கொண்டுவரத் திட்டமிடுகிறார். அவள் தூங்கும்போது அவள் இமைகளில் மந்திர மலர்ச் சாற்றை பிழிந்துவிட வேண்டியது. அவள் கண் விழிக்கும்போது முதன் முதலில் அவள் தன்னைப் பார்க்கும்படி செய்ய வேண்டியது, தம்மீது ஏற்படும் காதலால் அவள் அந்த வாலிபனை தன் பணியாளனாக வற்புறுத்துவதைக் கைவிடுவாள். இது தான் ஒபரானின் திட்டம்.




பக் மந்திர மலர்களைக் கொண்டுவரப் போயிருக்கும் சமயத்தில் கானகத்தின் ஓரிடத்தில் டெமிற்றியசும் ஹெலனாவும் சச்சரவிட்டுக் கொண்டிருப்பதை தற்செயலாகக் கேட்கிறார். ஹெலனா தன்னை மணந்து கொள்ளும்படி டெமிற்றியஸிடம் மன்றாடுகிறாள். ஆனால் டெமிற்றியசோ அவளை ஏற்க மறுக்கிறான். ஹெலனாவிடம் ஒபரானுக்கு அனுதாபம் ஏற்படுகிறது. பக் மந்திர மலர்களுடன் வந்ததும், அவனிடம் கொஞ்ச மலர்களைக் கொடுத்து அதன் சாற்றை டெமிற்றியஸ் தூங்கும்போது அவன் இமைகளின் மேல் பிழியுமாறு கூறுகிறான். மலர் சாற்றின் மந்திர சக்தியினால் அவன் கண் விழித்ததும், ஹெலனாவின் மீது மையல் கொள்வான், என்று திட்டமிடுகிறான் ஒபரான். டெமிற்றியஸ் யார் என்பது பக்கிற்கு தெரிய வேண்டுமே. அதனிடம் டெமிற்றியஸின் ஆடை அலங்காரங்களைக் கூறுகிறான். ஏதென்ஸ் நகரப் பிரஜைகளின் உடைகளுடன் உறங்குபவன்தான் டெமிற்றியஸ் என்று சொல்லி அனுப்புகிறான். பாவம் ஒபரானுக்கு லைசாண்டரும் அதே கானகத்தில் இருப்பது தெரியாது. ஏதென்ஸ் நகரத்துப் பிரஜையின் உடையிலே தானே அவனும் இருப்பான்! இங்குதான் இன்பமான குழப்பம் ஏற்படுகிறது. பக் தவறுதலாக மந்திரச் சாற்றை அவன் இமைகளில் பிழிந்துவிடுகிறன். லைஸாண்டா துயில் நீங்கிக் கண் விழித்ததும், முதன்முதலில் அவன் பார்வை ஹெலனாவின் மீது விழுகிறது. அப்புறம்? அவன் அவள் மீது காதல் கொள்கிறான். ஹெலனாவுக்கு ஆத்தரமான ஆத்திரம். கோபமான கோபம். முதலில் அவள் ஏதோ

லைசாண்டர் தமாஸ் பண்ணுறான் என்றுதான் எண்ணினாள். ஆனால் கொஞ்ச நேரத்தில் லைசாண்டர் தன் மீது உண்மையாகவே காதல் வெறி கொண்டிருக்கிறான் என்பதை அறிந்ததும் அதிர்ந்து போகிறாள்.

குட்டிச்சாத்தான் பக் தவறு செய்துவிட்டான் என்பதை அறிகிறார் ஒபரான். ஆகவே டெமிற்றியஸின் இமைகளில் தானே மந்திர மலர்ச்சாற்றை தடவி விடுகிறார். டேமிற்றியஸ் துயில் நீங்கிக் கண் விழிக்கிறான். அவனது முதல் பார்வையில் இப்போதும் ஹெலனாவே சிக்குகிறாள். சற்று நேரத்துக்கு முன்பு நான் உன்னைக் காதலிக்கவில்லை என்று ஹெலனாவிடம் கடுகடுத்தவன் மந்திரமலர்சாற்றின் மகிமையினால் அவள் மீது தாங்க முடியாத மோகம் கொள்கிறான். குட்டிச்சாத்தானின் குளறுபடியினால் இப்போது ஹொலனாவை டெமிற்றியஸ்,லைசாண்டர், இருவருமே காதலிக்கலானார்கள். ஒபரான் எதற்காக பச்சிலைச் சாற்றை பயன்படுத்தத் திட்டமிட்டாரோ அதை மறந்துவிடவில்லை. தம் மனைவி டிட்டானியாவின் இமைகளில் பச்சிலைச் சாற்றைத் தடவி விடுகிறார். கர்வம் பிடித்தவள் கண் விழித்ததும் அற்பமான ஜீவன் எதையாவது பார்த்து அதன்மீது காதல் கொண்டு அலையட்டும் என்று கடுப்புடன் தனக்குள் கூறிக் கொள்கிறார் ஒபரான். அவள் மீது அத்தனை கோபம் அவருக்கு. அவர் எண்ணியபடியே ஒரு விபரீதம் நடக்கிறது. ஏதென்ஸ் நகரிலிருந்து சில பணியாளர்கள் அந்தக் கானகத்துக்கு வந்திருந்தனர். தீஸியஸ் என்ற பிரபுவின் திருமண வைபவத்தில் ஒரு நாடகத்தை








நிகழ்த்தத் திட்டமிருந்தனர். அதற்கான ஒத்திகையை நடாத்த அந்தக் கானகத்துக்கு வந்திருந்தார்கள் அவர்கள். அவர்களின் தலைவன் ஒரு நாடகப் பைத்தியம். பாட்டம் என்பது அவன் பெயர். எல்லாப்பாத்திரங் களையும் தானே நடிக்க வேண்டும் என்ற பேராசை கொண்டவன். தன் நடிப்புத் திறமையைப் பற்றி கர்வம் கொண்டவன். பாட்டத்தின் தற்பெருமையைக் கேட்ட குட்டிச் சாத்தான் பக் அவனை அவமானப்படுத்த எண்ணி தன் திறமையினால் அவனுக்கு கழுதை முகத்தை உண்டாக்கி விடுகிறது. இந் நிலையில் டிட்டானியா தூக்கத்திலிருந்து கண் விழித் ததும், முதலில் அவள் பார்வையில் படுகிறான் கழுதைத் தலையோடிருந்த பாட்டம்! மந்திர மலர்ச்சாறு தன் வேலையைச் செய்கிறது. கழுதைத் தலையோடு கூடிய நாடகப் பித்தன் பாட்டமைக் காதலிக்க ஆரம்பித்து விடுகிறாள் காதலி டிட்டானியா.

ஒபரானுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. கொண்டாட்டமான கொண்டாட்டம். கழுதைத் தலையோடு கூடிய ஒரு பாட்டாளியிடம், மனதைப் பறிகொடுத்து, அவன் பின்னால் அவள் ஓடுவதைக் கண்டு குதூகலிக்கிறார். புதிய காதல் வெறியில் டிட்டானியா அந்தப் புதிய இளைஞனைப் புறக்கணித்து ஒபரானையே அவனைத் தன் மெய்பாதுகாவலனாக்கிக் கொள்ள சம்மதித்து விடுகிறாள். மனைவியின் கர்வத்தை அடிக்கி பிடிவாதத்தை மாற்றியதும் ஒபரானுக்கு, அவள் மீது அனுதாபம் பிறக்கிறது. மாற்று மருந்தைப் பயன்படுத்தி, அவள் மயக்கத்தைத் தெளிவிக்கத் தீர்மானிக்கிறார். மகிழ்ச்சி நிறைந்த மனத்தினரான ஒபரான் தன் மந்திர மலர்ச்சாற்றினால். ஏற்பட்ட குளறுபடிகளையெல்லாம், ஒழுங்குபடுத்த முடிவு செய்கிறார். பக்கை அழைத்துக் கானகத்தை கனமான மூடுபனியினால், போர்த்தும்படியும், காதலர்களையெல்லாம் ஒரே இடத்தில் கூடும்படியும் செய்யச் சொல்கிறார். குட்டிச்சாத்தான் பக்கும், மன்னர் ஒபரானின் ஆணைப்படி செய்கிறது. கனமான மூடுபனியில் காதலர்கள் ஒரே இடத்தில் கூடிக் கண்ணயர்கின்றனர். ஒபரானின் உத்தரவுப் படி பக் மலர்ச்சாற்றை காதலர்களின் இமைகளில் தடவுகிறான். அவர்கள் கண் விழித்துப் பார்க்கும்போது அவரவர்களுடைய காதலிகளே கண்ணில் படும்படியான ஏற்பாட்டைச் செய்யும்படி பக்கினிடம் கூறுகிறார் ஒபரான். திட்டமிட்டபடி டெமிற்றியஸ் கண் விழித்ததும் ஹெலனாவை காண்கிறான். அவளிடம் காதல் கொள்கிறான். லைசாண்டரன் முதல் பார்வையில் ஹொமியா படுகிறாள். பழையபடியே அந்தக் காதல் ஜோடிகள் ஒன்று சேர்கின்றன. துயில் எழுந்த டிட்டானியாவின் முதல் பார்வையில் இப்போது ஒபரான்தான் தென்பட்டார் என்பதைச் சொல்லவா வேண்டும். டேமிற்றியஸ் ஹெலனாவை மணக்கச் சம்மதித்து விட்டபடியால் ஹொமியா, லைசாண்டரை மணப்பதில் தடையேதும் ஏற்படவில்லை. எல்லாமே நல்லபடியாக முடியும்.

'இனிது இனிது' இரு இதழ்களிலும் வெளியான கேள்விகளுக்குப் பலர் சரியான விடைகளை எழுதி அனுப்பியிருந்தனர். அவர்களில் வெற்றியாளர்களாக குலுக்கல் முறையில் மூவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

" அறிவை இனிதாய்ப் பகிர்ந்து அகத்தில் உறவை வளர்ப்போம் "

இனிது

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தொலைபேசி. இல : ..............................................

## பரிசுக்குரியவர்கள் இவர்கள் தான்

① அசோகன் அனுசியா,
15ஆம் ஒழுங்கை,
முல்லை வீதி,
பரந்தன்.

② வி.செல்வநாயகம்,
சிவன்கோவில் வீதி,
புத்தூர்.

③ G.Maryjupresiya
சண்டிலிப்பாய்- கிழக்கு,
சண்டிலிப்பாய்.

### இவ்விதழுக்கான ஐந்து கேள்விகள்

1.ஹிரோசிமா மீது அமெரிக்கா போட்ட அணுகுண்டிற்கு இட்ட பெயர் என்ன?

2.GreenTea அருந்துவதால் என்ன நன்மை?

3.I am sam ஆங்கிலத்திரைப்படம் பெற்ற விருதுகள் எவை?

4.கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் எத்தனை சதவீதமானோர் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்?

5.பறவைகள் தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியை எதற்கு பயன் படுத்துகின்றன?

**விடைகளைத் தெளிவாக எழுதி இங்குள்ள கூப்பனோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.**










பரிசளிப்பு குறித்து கடிதம் மூலம் அறிவிக்கப்படும்

■ செல்வதாசன்



இலண்டனில் சாவா சுப்பர் மார்க்கற் மிகப் பிரபல்யமானது. அங்கு சாவகச்சேரி பலாப்பழம் கூட, அதுவும் 'அவுட் ஒப் சீசனில்' கூடக் கிடைக்குமாம். யாழ்ப்பாணத்துப் பண்டங்கள் எது வேண்டுமானாலும் அங்கு வாங்கலாமாம். அதனை நடத்துவது சாவகச்சேரிப் பையன். சாவகச்சேரி சுப்பையாபிள்ளையின் மகன் மயூரன். மயூரன் நான்கு பெண் பிள்ளைகளுக்குப் பிறகு ஐந்தாவதாகப் பிறந்தவன். தகப்பனினதும், தமக்கைமாரினதும் கஷ்டம் புரிந்தவன். இலண்டனுக்குச் சென்று, படித்துப் படித்து வேலை செய்து, சின்னதாக ஒரு கடை தொடங்கி, காலப் போக்கில் அங்கு உள்ள நண்பர்கள் உதவியுடன் அப்பொழுது அது ஒரு சுப்பர் மார்க்கற். சாவகச்சேரி சுப்பையாபிள்ளை, அடுத்தடுத்து நாலு பெண்பிள்ளைகள் பிறந்த பின்னர், கொஞ்சம் ஈடாடித்தான் போனார். ஐஞ்சாங்கால் பொம்பிளைப் பிள்ளை பிறந்தால், கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக் கொண்டு கொடுக்கும் என்று நம்பினார். ஆனால், ஐந்தாவது ஆண் பிள்ளையாய்ப் பிறந்து விட்டது. ஆனால், அவன் பிறந்த பின்தான் சுப்பையாபிள்ளை கொஞ்சம் முன்னேறியிருந்தார்.

சுப்பையாக் கடை வெறும் பெட்டிக்கடையாக இருந்து, சீமெந்துக் கட்டடமாக கொஞ்சம்

# றோட்டுக்கரை வீடு

பெரிதாக வளர்ந்ததும், மகன் மயூரன் பிறந்த பின்னர் தான். சுப்பர் கடை என்றால் அந்தப் பிரதேசத்தில் தெரியாதவர்கள் இல்லை. அது நாளடைவில் வளர்ந்து, இப்பொழுது மகன் இலண்டனில் செற்றில் ஆகி, அங்கு சாவா சுப்பர் மார்க்கற் தொடங்கிய பின்னர் இங்கு சாவகச்சேரியிலும், தங்களது சுப்பர் கடையைக் கொஞ்சம் விசாலித்து, சாவா சுப்பர் மார்க்கற் என்று கிளைக்கடையாக, பெரிய விளம்பரப் பலகையும் போட்டு, கடை அந்த மாதிரி நடக்கின்றது. சாவகச்சேரியில் சுப்பர் என அழைக்கப்படும் சுப்பையாப்பிள்ளை இறந்த பின்பும், அவரின் பெயரால் சாவா சுப்பர் மார்க்கற் என்ற பெயரில் கடை இயங்குவது, சுப்பரின் மூத்த மகளுக்குச் சந்தோசம் என்ற சந்தோசம். இப்ப கடையை நடத்துவது மூத்த மகளும், மருமகனும் தான்.

சுப்பையாப்பிள்ளை கஷ்டத்திலும், தனது பிள்ளைகளைப் படிப்பிப்பதில் பின் நின்றதில்லை. மூத்த மகள் கமலா சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் க.பொ.த. உயர் தரம் வரை படித்தவள். பரீட்சைக்கு முன்னரே அவளுக்குத் திருமணம் முடிந்து விட்டது. சொந்த மருமகன்தான் மாப்பிள்ளை. ஒன்று இரண்டு பெண் பிள்ளையைப் பெற்றவர்களே படும்பாடு. மருமகன் விரும்பியதும் செய்து கொடுத்து விட்டார் சுப்பையாப்பிள்ளை. மகளும் பெரிதாக எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. திருமணம் முடிந்ததும் கமலா கணவருடன் முத்தையன் கட்டிற்குச் சென்றுவிட்டாள். அங்கு ஒரு பதினைந்து ஏக்கர் வரையில் காடு திருத்தி விவசாயம். கஷ்டப்பட்டு உழைத்தனர். நிலமும் கைவிடவில்லை. வசதியான வாழ்க்கை. அவர்களின் வருமானத்துடனும், சுப்பர் கடையிலிருந்து வந்த தந்தையின் வருமானத்துடனும், ஏனைய பெண் பிள்ளைகளினதும், ஆண் பிள்ளையினதும் கல்வியில் தொய்வின்றிப் படிப்பித்தனர். இரண்டாவது மகள் சியாமளா, உயிரியல் பிரிவில், வைத்திய பீட அனுமதி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர். ஆனாலும் பி.எஸ்.ஸி விவசாயம்தான் கிடைத்தது. பட்டதாரியாகி வெளியேறினாள். பல்கலைக்கழகத்தால் வெளியேறி அடுத்த வருடமே அரசாங்க உத்தியோகம் கிடைத்தது. போட்டிப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த அவளுக்கு ஒரு இளம் எஸ். எல். ஏ. எஸ் உத்தியோகத்தருக்கு நிர்வாகச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. வாட்ட சாட்டமான உத்தியோகத்தர். அதுவும் எஸ். எல். ஏ. எஸ் உத்தியோகத்தர். அவருக்கு சியாமளாவைப் பிடித்துப் போயிற்று. சியாமளாவை மட்டும் அல்ல. அவர்களது காணி, வீட்டையும்தான். சாவகச்சேரிக் கண்டி வீதியில் காணிகள், அப்பிரதேச ஏனைய காணிகளை விட மதிப்புக் கொஞ்சம் கூடத்தான். சுப்பையாப்பிள்ளை குடும்பம் தொடக்கத்தில் கொஞ்சம் கஷ்டப்பட்டக் குடும்பம். பெரிய அளவில் சொத்துக்கள் இல்லை. ஆனாலும் றோட்டுக்கரையை அதுவும், கண்டி றோட்டுக்கரையை அண்டிய ஒரு பத்துப் பரப்புக் காணி. முகப்புப் பக்கம் கண்டி றோட் இப்ப ஏ 9 றோட் என்று சொன்னால் தான் தெரியும். இவர்களது காணியை ஒட்டி ஒரு ஒழுங்கை. அது வயல்களுக்குச் செல்லும் பாதை. முன்பு அவரின் இந்தப் பத்துப் பரப்புக் காணியும், வயல்காணியாக இருந்திருக்கலாம்.

மகன் மயூரன் வெளிநாடு சென்று உழைக்கத் தொடங்கியதும், கிடைக்கத் தொடங்கிய வருமானத்திலும், கமலா குடும்பத்தினரது, வன்னி வயல் தோட்ட வருமானமும், சுப்பர் கடை என்கின்ற சாவா சுப்பர் மார்க்கற் வருமானமும், பிள்ளைகளது உத்தியோக வருமானமும் வர பத்துப் பரப்புக் காணியும் ஐந்து துண்டுகள் ஆகின. முதற் காணிக்குத்தான் ஏ 9 முகப்புப் பாதை. மற்றைய காணிகளுக்கு, வயலுக்குச் செல்கின்ற ஒழுங்கை தான் பாதை. முதல் நான்கு காணிகளுக்குள்ளும் ஒரே மாதிரியான நான்கு நான்கு வீடுகளைக் கட்டி முடித்திருந்தார் சுப்பையாபிள்ளை. முதற் துண்டுக்காணி சுப்பையாவின் மூத்தமகள் கமலாவிற்கு. அவர்கள் வன்னியில் இருந்தாலும், பிள்ளைகள் இருந்து படிப்பது இங்குதான். சியாமளா கலியாணம் முடிக்கு மட்டும் அந்த வீட்டில்தான் அனைவரும் இருந்தனர். அந்த வீடு கமலாவிற்கு எழுதப்பட்டிருந்தது. சியாமளாவிற்கு அவள் உத்தியோகம் பார்க்கும் கந்தோர் எஸ். எல்.ஏ எஸ் மாப்பிள்ளைக்கு பேச்சுக்கால் தொடங்கியதும், அந்த றோட்டுக்கரை வீடு தமக்குத் தரப்பட வேண்டும் எனப் பேரம் பேசத்தொடங்கினர். இல்லாவிட்டால் கலியாணம் குழம்பும் போன்ற நிலையும் ஏற்பட்டது.

தன்னை விரும்பிவிட்டு, இரண்டாவது துண்டுக் காணியிலிருந்த வீட்டினை இவர்களுக்கு எழுதித் தருவதாக, சுப்பையாப்பிள்ளை கூறியும் றோட்டுக்கரை வீடு தான் வேணுமென்று நாண்டு கொண்டு நின்றதனை சியாமளாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.



அல்லாமலும் பரப்பிரகா சத்தாரிட்டை (அதுதான் கமலாவின் கணவர் பெயர்) ஆர் வரப் போகினம்? சும்மா நெல்லு மூட்டை அடுக்கிறதுக்கும், போயிலைச் சிப்பம், வெங்காயத் தூக்கினைத் தூக்கிறதுக்கும், உந்த ரக்ரரை நிப்பாட்டுறதுக்கும்தானே றோட்டுக்கரை வீடு பயன் படப் போகுது, இந்த யுத்த நிறுத்த காலத்திலை மினிஸ்ரற்றை செக்கரட்ராரிமார் ஆரும் வந்தால், தன்னைச் சந்திக்காமல் போக மாட்டினம். றோட்டுக்கரை வீடுதான் ஒரு கௌரவமாக இருக்கும் என்ற சியாமளாவின் வருங்காலக் கணவரான உத்தியோகத்தரின் வாதம் அவளுக்குக் கசப்பாகவே இருந்தது. அல்லாமலும் தனது மூத்த அக்காவின் கணவரை, அவர் சேட்டுப் போடாது, தோளிலை சால்வையையும் போட்டுக்கொண்டு, சாவகச்சேரியிலை இருந்து, முத்தையன்கட்டு வரை போய் வருவதனை நக்கல் அடித்ததை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்பவே இப்படியென்றால் திருமணம் முடித்த பின்?.. சிந்தித்த சியாமளா வேறு ஒரு திணைக்களத்திற்கு மாற்றம் எடுத்துக்கொண்டு செல்ல முயற்சித்தாள். இதனைச் சாடை மாடையாகக் கேள்விப்பட்ட மயூரன் இலண்டனிலிருந்து நேரடியாக ஊருக்கு வந்தான்.



ஒரு 'எஸ் எல். ஏ. எஸ்' மாப்பிள்ளை என்றால் சும்மாவா?...கேட்டதைக் கொடுத்து அந்தத் திருமணத்தைச் சிறப்பாக முடித்து வைக்கத் தீர்மானித்தான். மூத்த அக்கா கமலாவும், கணவனும் றோட்டுக்கரை வீட்டினை மகிழ்ச்சியோடு எழுதிக் கொடுத்தனர்.

சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோவில் கலியாண மண்டபத்தில், ஜாம் ஜாம் என்று திருமணத்தை நடத்தி வைத்து விட்டு இலண்டன் சென்றான் மயூரன். இரண்டாவது துண்டுக்காணியை மூத்த மகளுக்கும், மூன்றாவது, நாலாவது காணித்துண்டுகளை வீட்டுடன் அடுத்த பெண் பிள்ளைகளுக்கும் எழுதி அவர்களுக்கும் திருமணத்தை முடித்துக் கொடுத்துவிட்டு சிவனே என்று கண்ணை மூடிவிட்டார் சுப்பையாப்பிள்ளை. கடைசித் துண்டுக் காணியில் அழகான ஒரு இரண்டு அடுக்கு வீடு. வீடல்ல அது மாளிகை. மயூரன் தனக்கெனச் சொல்லிக் கட்டிக்கொண்டு வருகின்றான். அவன் அதனைத் தனக்கெனச் சொல்லிக் கொண்டாலும், தம்மைஎல்லாம் வளர்த்து ஆளாக்கிய மூத்த அக்காவின் மகளுக்கென்றே அவன் அதனைக் கட்டுவித்து வந்தான். சமாதான காலம் முடிந்தது. மீண்டும் யுத்தம். மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தை... மீண்டும் போர். இப்போது நிரந்தரமாகவே யுத்தம் முடிவிற்கு வந்து விட்டது. சியாமளாவின் கணவர் வரி விலக்கிலிருந்து வாங்கிய புத்தம் புதுக்கார் - புது மணமக்களை ஏற்றிச் செல்லும் அலங்காரக் கார் போல அந்த றோட்டுக்கரை வீட்டில் நிற்பது ஒரு அழகு தான். பலூன் பஸ், மற்றும் அந்த இந்த வாகனத்தில் ஏ-9 வீதியால் செல்பவர்களை ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும்.. கிறங்கச் செய்யும். சியாமளாவுக்கும் மூத்தது பெண் பிள்ளைதான். பரம்பரை அப்படிப் போல. யாரையோ விரும்பி இருக்கிறாளாம். அந்த பொடியனின் தாய் தந்தையர், கொழும்பிலோ அல்லது வவுனியாவிலோ வீடு தந்தால்தான் கலியாணம் நடக்கும் என்று நிற்கிறார்களாம். சியாமளாவின் கணவர் இதனையறிந்து துள்ளியடித்தார். கொதித்து எழுந்தார். சியாமளா தனக்குள் சிரித்துக்கொண்டாள். வரிசையாக இன்னும் இரண்டு குமர்களும் உள்ளனர். தன்னை விரும்பியிருந்து, பின்னர் றோட்டுக்கரை வீடு தந்தால்தான், தாலி கழுத்தில் ஏறும் என்று நிபந்தனை போட்ட தனது கணவரை நினைக்க அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. றோட்டுக்கரை வீட்டினை வாரி வழங்க முன்வந்த தனது தமக்கை மைத்துனர் அவர்களின் அன்பினையும் பாசத்தினையும், றோட்டுக்கரை வீட்டினைத் தனது மூத்த மகளிற்குக் கொடுக்க முடியவில்லையே என்ற தனது தந்தையின் ஆதங்கத்தினையும், அவள் நினைத்துப் பார்க்காத நாள்களே இல்லை.

வவுனியாவில் வீடு வளவு கேட்டவர்கள் மீது, தனது கணவர் சீறி விழுந்தது சியாமளாவிற்கு வேடிக்கையாக இருந்தது. கணவனின் துயரில் அல்லது ஆத்திரத்தில் பங்குகொள்ளாது மனம் ஏதோவொரு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. மறு நாள் அந்த மகிழ்ச்சி மேலும் இரட்டிப்பாகியது. அவள் வேலையால் வந்து பஸ்ஸிலிருந்து

இறங்கும் போதுதான் பக்கத்து வெறும் காணியைப் பார்த்தாள். அதில் ஒரு புதிய எல்லைக்கல். ஏ 9 வீதியை அகலிப்பதற்காக, வீதி அபிவிருத்தி அதிகார சபை நாட்டிய மஞ்சள் எல்லைக் கல். அதனைக் கண்டு அவளது உள்ளம் ஒரு இனம் புரியாத உணர்வில் ஆழ்ந்தது. அப்பாவிற்கு பரம்பரை பரம்பரையாகக் கிடைத்த காணி பறி போகின்றதே என்ற தவிப்பும், மூன்று பெண்பிள்ளைகளில் ஒருத்திக்கேனும் நிறைவாகக் கொடுப்போம் என்ற தனது உளக்கிடக்கையும் நிறைவேறப் போவதில்லை என்ற அந்த ஏக்கமும் ஒரு இனம் புரியாத உணர்வை அவளுள் கொண்டு வந்தது. ஆனாலும் எல்லைக் கல்லின்படி, இனி அவர்கள் வீட்டின் சாமி அறையை ஊடறுத்து, ஏ 9 வீதி செல்லும். முழுக்கிணறும் ஏ 9 வீதியின் விளிம்பினுள் அடங்கிவிடும். வீடே றோட்டுக்குள்ளும், றோட்டே வீட்டுக்குள்ளும் வந்து விடும். றோட்டுக்கரை வீட்டுக்காக கணவர் அடம் பிடித்ததையும் இப்போ றோட்டே வீட்டுக்குள் வந்து விடப்போகும் நிலைமையையும் எண்ணிப்பார்க்க அவள் இது வீதியால் வந்த வினையல்ல, விதியால் வந்தது என தலையில் அடித்துக் கொண்டாள்.




"அரசியல்வாதியின் மகளைக் காதலித்தது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"காதலை வாபஸ் வாங்கிக் கொள்வேன் என்று அடிக்கடி மிரட்டுறாள்."

## மறக்க முடியாத சிரிப்பு..



நன்றி - சிரித்திரன்

■ **சந்திரவதனா**
ஜேர்மனி.

**இந்த வயதில் அவர்களிடம் பல ஆசைகள் இருக்கும். ஆனால் அனேகமான பெற்றோர்கள் நினைக்கிறார்கள், இந்த வயதில் பிள்ளைகளிடம் காதல் ஒன்று மட்டும் தான் இருக்குமென்று. அந்த நினைவுகள் அவர்களைப் பயமுறுத்த, தவறுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற ஒரே எண்ணத்தைக் கருத்தில் கொண்டு பெண்பிள்ளைகளைக் கட்டிப்போட்டு விடுகிறார்கள்.**

உளவியல் சிக்கல்களில் பெண்கள் பாதிக்கப்பட்டிருப்பது இன்றைய புலம்பெயர் வாழ்வில் அதிகமாகிவிட்டது. ஏன், எதற்கு என்று குறிப்பிட்ட ஒரு சில காரணங்கள் மட்டுமில்லாமல், எந்த வயதில் என்றும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல் இந்த உளவியல் பிரச்சினை பெண்களின் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களிலும், பல்வேறு வளர்ச்சிப் படிகளிலும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. இங்கு நான் பெற்றோருடன் வாழ்கின்ற திருமணமாகாத எங்கள் பெண்பிள்ளைகள் உளவியல் பிரச்சினையில் மாய்வதற்கான காரணங்களை ஓரளவுக்கோ அல்லது மேலோட்டமாகவோ பார்க்க முயற்சிக்கிறேன்.

எங்களது ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் பிறந்ததிலிருந்து ஒரேமாதிரி உண்டு உறங்கி வளர்கிறார்கள். ஆனால், ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும்-அதாவது பெண் குழந்தைக்குப் பத்து வயது வந்ததும் எமது வளர்ப்பில் வித்தியாசம் ஏற்படத் தொடங்குகிறது. அப்போதே ஒரு பெண் குழந்தையின் மனதில் விசனங்களும் ஏற்படத் தொடங்கி விடுகின்றன. ஏன் என்ற கேள்வி மனசைக் குடையத் தொடங்கி விடுகின்றது. ஆண்பிள்ளை வெளியில் போய் விளையாடலாம். நினைத்த நேரம் வெளியில் போய் நினைத்த நேரம் வீட்டுக்குத் திரும்பலாம். ஆனால், ஒரு பெண்பிள்ளை ஏதோவொரு காரணத்துக்காகப் பத்து நிமிடங்கள் பிந்தினாலே ஏன்...? எதற்கு...? என்ற கேள்விகளால் குடைந்தெடுக்கப்படுகின்றாள்.



பெண்பிள்ளைகளைக் கவனமாக வளர்க்கிறோம் என்ற பெயரில் எத்தனை அநாவசியத் தடைகள் போடப்படுகின்றன. இந்தத் தடைகளும் அளவுக்கு மீறிய கண்டிப்பும் பெண்பிள்ளைகளைச் செப்பனிட்டு வளர்த்து விடப் போதுமானவை என்றுதான் அனேகமான பெற்றோர்கள் நினைக்கின்றார்கள். இதுதான் பெண்பிள்ளைகளை வளர்க்கும் முறை என்றதொரு ஆழ்ந்த கருத்தை அவர்கள் தமக்குள் பதித்தும் வைத்திருக்கிறார்கள்.

பெற்றோர்களது இந்தச் செயற்பாட்டுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அவர்கள் தம் பிள்ளைகளின் மேல் வைத்திருக்கும் அளவுக்கதிகமான பாசம். இரண்டாவது, இந்த சமூகத்தின் மேலுள்ள அதீத பயம். இரண்டையும் முடிச்சுப் போட்டுப் பார்த்தீர்களானால் இந்த சமூகம் தமது பெண்பிள்ளையை அடக்கமில்லாதவள் என்றோ, ஆட்டக்காரி என்றோ சொல்லிவிடும் என்றும், அதனால் தமது மகளுக்கு திருமணம் நடக்காது போய் விடும் என்றும் பெண்ணைப் பெற்றவர்கள் பயப்படுகின்றார்கள். இது போன்று இன்னும் வேறு சில காரணங்களும், அதனால் ஏற்படும் பயங்களும் தான் பெற்றோர்களை இப்படியான முடிவுகளை எடுக்க வைக்கிறது. அவர்களின் இந்த முடிவினால் அவர்கள் பெண்பிள்ளைகளின் முன் கட்டியெழுப்பும் தடைகள் அதிகமாகின்றன. தடைகள் அதிகமாக அதிகமாகத்தான் அதை உடைத்தெறியும் வீறாப்பு ஏற்படும்

**பெண்பிள்ளைகளை மட்டுந்தான் கட்டிப் போடுகிறார்கள். ஆண் பிள்ளைகள் தவறினால், அது தவறு இல்லை, இயல்பு என்பது எமது சமூகத்தின் கணிப்பீடு.**

# புலம்பெயர் வாழ்வில் தமிழ்ப்பெண்கள்

## எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள்

என்பதை எந்தப் பெற்றோரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அதேநேரம் இந்த உடைத்தெறியும் துணிவு எத்தனை பேருக்கு வரும்? உடைத்தெறியும் துணிவு வந்தாலும் அதைச் செயற்படுத்தும் தைரியம் எத்தனை பேருக்கு வரும்? இந்தத் துணிவு, தைரியம் எதுவும் வராதவர்கள்தான், எல்லாவற்றையும் மனதுக்குள்ளே வைத்து வருந்தி வருந்தி உளவியல் பிரச்சினைக்கு அடிமையாகிறார்கள்.

வீட்டிலே அம்மாவும் அப்பாவும் ஐரோப்பிய ஸ்ரைலில் எல்லாம் செய்வார்கள். ஆனால் அவர்களின் பெண்பிள்ளை வகுப்பு மாணவியின் அல்லது நண்பியின் பிறந்தநாள் விழாவுக்குப் போகவேண்டுமென்று கேட்டால் மட்டும் எமது கலாச்சாரத்தைச் சொல்லித் தடுத்து விடுவார்கள். பெண்பிள்ளை பாடசாலையால் வீட்டுக்கு வந்ததும் வராததுமாய் வீட்டுக்கு வரப் போகும் விருந்தினரை வரவேற்க அவளைக் கொண்டும் வேலைகள் செய்விப்பார்கள். விருந்தினர் வந்தவுடன் அப்பா போத்தலும் கிளாசுமாக இருந்து நண்பர்களுடன் அரட்டை அடிப்பார். அம்மா அப்பாவின் நண்பர்களது மனைவியருடன் சமையலறையில் சமையலும் அரட்டையுமாக நிற்பார். அண்ணன், தம்பி எல்லோரும் நண்பர்களிடமோ அல்லது விளையாடவோ வெளியில் போய்விடுவார்கள். அந்தப் பெண்பிள்ளை என்ன செய்யும்?

அப்பாவும் அப்பாவின் நண்பர்களும் தொலைக்காட்சியில் என்ன பார்க்கிறார்களோ! அதையே பார்த்து... அம்மாவும் அப்பாவின் நண்பர்களின் மனைவியரும் என்ன அரட்டை அடிக்கிறார்களோ! அதையே கேட்டு..! இதுதான் பத்து வயது தாண்டிய ஒரு பெண்பிள்ளையின் அறிவை வளர்க்கும் விடயங்களா? அல்லது இவை அந்த வயதில் அவளின் மனதில் சிறகடிக்கும் இனிய கனவுகளுக்கும், நினைவுகளுக் கும் போடும் தீனியா? வீட்டு வேலைகளைப் பிள்ளைகள் பழகத்தான் வேண்டும். ஆனால் அதுதான் அவர்கள் வாழ்க்கை என்றில்லை. அது போகப் பெண்பிள்ளைகள் மட்டும்தான் வீட்டு வேலைகளைப் பழக வேண்டுமென்று மில்லை. பெண்பிள்ளைகள் வெளியுலகத்தையும் பார்க்க வேண்டும்.



இந்த வயதில் அவர்களிடம் பல ஆசைகள் இருக்கும். ஆனால் அனேகமான பெற்றோர்கள் நினைக்கிறார்கள், இந்த வயதில் பிள்ளைகளிடம் காதல் ஒன்று மட்டும் தான் இருக்குமென்று. அந்த நினைவுகள் அவர்களைப் பயமுறுத்த தவறுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற ஒரே எண்ணத்தைக் கருத்தில் கொண்டு பெண்பிள்ளைகளைக் கட்டிப் போட்டு விடுகிறார்கள். இங்கு கூட பெண்பிள்ளைகளை மட்டுந்தான் கட்டிப் போடுகிறார்கள். ஆண் பிள்ளைகள் தவறினால், அது தவறு இல்லை, இயல்பு என்பது எமது சமூகத்தின் கணிப்பீடு.

பெற்றோர்களினதும், சமூகத்தினதும் இந்தத் தவறான கணிப்பீடு, பெண் பிள்ளைகளின் மனதில் ஒருவித

விரக்தியையும், வேதனையையும் ஏற்படுத்தி அதுவே நாளடைவில் உளவியல் தாக்கமாகி விடுகிறது. இதனால் அந்தப் பெண்பிள் ளைகளின் மனம் மட்டுமல்லாமல், உடல் கூடப் பாதிக்கப்படுவது ஆராய்ச்சி ரீதியாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய மருத்துவர் களும், அமெரிக்க மருத்துவர்களும், ஐரோப் பிய, அமெரிக்கப் பெண்களை விட புலம் பெயர்ந்திருக்கும் ஆசியத் தமிழ்ப் பெண்கள் தோள்மூட்டு வலியாலும், மிக்ரேனே எனப்ப டும் கபால இடியாலும் மிகவும் அவஸ்தைப் படுவதைக் கண்டு பிடித்து ஒரு ஆராய்ச்சியும் செய்தார்கள். இந்த ஆராய்ச்சியிலிருந்து அவர் கள் கண்டு கொண்டது புலம்பெயர்ந்திருக்கும் ஆசியத் தமிழ்ப்பெண்களில் நூற்றுக்குத் தொண் ணூறு வீதமான ஆசியத் தமிழ்ப்பெண்கள் ஏதோ ஒரு வித மன அழுத்தத்துக்கு ஆளாகியிருக் கின்றார்கள். அதனால் அவர்களின் தோள் மூட்டில் வலியோ அல்லது தாங்க முடியாத தலை இடியாகிய கபால இடியோ ஏற்ப டுகின்றது. அல்லது அதையும் மீறி எல்லோர் மீதும் கோபமும், எரிச்சலும் ஏற்பட்டு அதை வெளியில் கொட்ட முடியாது உள்ளுக்குள் ளேயே அடக்கி, அடக்கி அது மூளையின் சில நரம்புகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்க, இரண்டு காதின் பின் புற நரம்புகளும் புடைத்து, அவர்களுக்கே இது ஏன் என்று தெரியாமல் அவர்கள் நோயாளிகள் ஆகிக் கொண்டிருக்கின்றார்கள்.இந்த விடயங்களை அனேகமான பெற்றோர்கள் இன்னும் அறிந்து கொள்ளாமல் இருப்பது சற்று கவலைக்குரிய விடயம். பெற்றோர்கள் ஒரு விடயத்தை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, பெண் பிள்ளைகளை அளவுக்கதிகமாக அடக்கி வளர்ப் பது தான் அவர்களைச் சிறந்த முறையில் வளர்ப் பதற்கான வழி இல்லை என்பதை.அவர்களுக்கு ஓரளவுக்காவது சுதந்திரம் கொடுக்க வேண்டும். அவர்களைப் பேச விட வேண்டும். அவர்களை மற்றவர்களுடன் பழக விட வேண்டும். வாழும் முறை பற்றி அவர்களுக்குப் பக்குவமாய்ச் சொல் லிக் கொடுக்க வேண்டும். அதை விடுத்து-நீ பெண் - அதனால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றோ

நீ பெண் - அதனால் இப்படித்தான் பேச வேண்டும் என்றோ அல்லது

நீ பெண் - அதனால் இன்ன இன்னது தான் செய்யலாம் என்றோ வரைய றைகள் போடுவது மிகவும் தப்பானது. ஒரு பெண்குழந்தையின் திறமைகள் இப்படியான செயற்பாடுகளால் கட்டிப் போடப்படுகின்றன. அந்த நிலையில், தன் திறமையை வெளிப்படுத்த முடியாத கோபத்தில், அது பற்றிப் பேசக் கூட முடியாத விரக்தியில் அந்தக் குழந்தை உளவியல் நோயா ளியாகிறது.



ஆண்பிள்ளை வெளியில் போய் விளையாடலாம். நினைத்த நேரம் வெளியில் போய் நினைத்த நேரம் வீட்டுக்குத் திரும்பலாம். ஆனால், ஒரு பெண் பிள்ளை...

ஆதலால் பெற்றோர்கள் சற்று அல்ல, நிறையவே சிந்திக்க வேண்டும். தமது பிள் ளைகளை தாமேஉளவியல் நோயாளியாக்கும் அவல வேலையைச் செய்யாமல், அன்பு, நட்புடன் சுதந்திரத்தையும் கொடுத்து, ஒழுக் கத்தையும் சரியான முறையில் போதித்து அவர்களை வளர்க்க வேண்டும். பிள்ளையின் நடத்தையில் தவறு கண்டால், நீ பெண்பிள்ளை என்றோ, எமது கலாச்சாரம் என்றோ அவளைப் பயமுறுத்தாமல், அவளை அன்போடு அணுகி, ஆதரவோடு பேசி, நானிருக்கிறேன் உனக்கு என்ற நம்பிக்கையை அவள் மனதில் விதைக்க வேண்டும். அப்போதுதான் அவள் நட்போடு உங்களைப் பார்ப்பாள். பயம் தெளிந்து உங்க ளுடன் பேசி நல்ல பாதைக்குத் திரும்புவாள். வீட்டுக்குள்ளேயே வைத்து, அடக்கம் என்ற பெயரில் அடக்கி வளர்க்கப்படும் பிள்ளை களை விட, உங்கள் பிள்ளை நல்லது, கெட்ட தைப் பகிர்ந்துணரும் தன்மைகொண்டவளாக இருப்பாள். மிக மிக முக்கியமான விடயம், பெற்றோர்கள் தங்கள் நண்பர்களுடன் அரட் டையடிப்பதற்காகச் செலவு செய்யும் நேரத்தை விடக் கூடிய நேரத்தை தமது பிள்ளைகளுடன் அரட்டை அடிப்பதற்குச் செலவு செய்ய வேண்டும். அது பிள்ளைகளின் மனதில் ஒரு சந்தோசத்தையும், பெற் றோரிடம் எதையும் மனம் திறந்து பேசி, ஆலோ சனை கேட்கும் தன்மையையும் ஏற்படுத்தும். அதை விடுத்து கலாச்சாரம், பண்பாடு என்ற பெயரில் பெண் பிள்ளைகளை அடக்க நினைத்தால் இந்த உள வியல் பிரச்சினை எமது பெண்பிள்ளைகளின் மத்தி யில் தொடர்ந்து கொண்டே யிருக்கும்.•



நாட்டுக்காக எது வேனுமெண்டாலும்
செய்யத் தயார் எண்டு
தலைவர் மேடையில் பேசுகிறாரே...?

ஓட்டுக்கும், நோட்டுக்கும் எது
வேணுமெண்டாலும்செய்வேன்.
எண்டா பேச முடியும்!



தலைவர் திடீரெண்டு
ஆஸ்பத்திரி கட்டுறாரே
என்ன விஷயம்?


அவருக்கு டாக்டர் பட்டம்
கொடுக்கிறாங்களாம்.
தொழிலை ஆரம்பிச்சிடலாம்
எண்டு பார்க்கிறார்?.



அடுத்த மாகாணசபைத் தேர்தல்
திடீர் எண்டு வந்தால்
அதைச் சந்திக்கத்தயாராக
இருக்கிறியளோ...?

தேர்தலை ஈசியாகச் சந்திக்கலாம்
ஆனால்,
மக்களை எப்படிச் சந்திக்கிறது
எண்டுதான் தெரியேல....?

# கதைகள் காலத்தை வெல்லக்கூடியன







கதைகள், மற்றும், சொல்லப்படுகின்ற கதைகள் எனக் கதைகள் பற்றிய வரலாறு மிகவும் நீளமானது. சின்ன வயதில் வீட்டில் தொடங்கி பாடசாலை தொடக்கம் கதைகள் பற்றிய எமது நெருக்கம் அலாதியானது. நாம் கேட்கின்ற கதைகளில் வரும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் எப்படிப்பட்டதாய் காணப்பட்ட போதும், அவற்றை எம் மனக்கண் முன்னே அப்படியே கொண்டு வருகின்ற ஆற்றலை ஒவ்வொரு கதையும் கொண்டிருக்கிறன. தெரிந்திருக்கும் விடயங்கள் பற்றிய கதைகள் கூட, குறித்த விடயம் பற்றிய எமது பார்வையை புதுப்பித்துக் கொள்வதற்கு வழி வகுப்பது உண்மை.

இங்கு கதைகளுக்குப் பஞ்சமில்லை. கதைகள் இன்றைய நிலையில் பல பெயர்கள் கொண்டு வழங்கப்படுகின்றன. அன்றாடம் ஒரு தனி மனிதன் சந்திக்கின்ற அத்தனை விடயங்களும் கதைகள் மூலமே தனக்கான இருப்பை நிலைப்படுத்திக்கொள்கின்றன. தாகமாயிருந்த காகம், பக்கத்திலிருந்த கற்களையெல்லாம் எடுத்து குடத்திற்குள் போட்டதாம்.. என்று விரிகின்ற கதையில் புத்திசாலித்தனத்தைக் காட்டுகின்ற காகத்தை யாரால்தான் மறந்துவிட முடியும்? நீதிக்கதைகள் என்ற நிலையில் கதைகள் சொல்லித்தருவது, சின்ன வயசுப் பாடசாலைக்கால நினைவுகள். அந்த ஒவ்வொரு கதையும் கொண்டுள்ள சாதுரியமான அணுகுமுறைகளை எல்லாக் குழந்தைகளும் இரசிப்பர். ஆனாலும், ஆரம்ப காலத்தில் சொல்லப்பட்ட கதைகள் பலதிலும் மிருகங்கள் கதாபாத்திரங்களாய் வந்து போகின்றதும், அவை முன்னுதாரணமாய் இருக்கின்றதுமான வடிவங்களையே கொண்டிருந்தன. அது மிருகங்களிலிருந்து சடப்பொருள்கள் எனப் பல விடயங்கள் சார்ந்த கதைகளாகப் பின்னர் விரிந்து செல்வதும் சுவையானது. இளமைக்காலத்தில் நாம்


















கேட்ட கதைகள் அப்படியிருக்க, இயன்றளவிலும் உலகின் அச்சாணி யாய் கதைகள்தான் இருக்கிற தென் றால் மிகையில்லை. ஆசிரியர் மாண வர்களுக்குச் பாடம் சொல்லிக் கொடு ப்பது, வியாபாரி தன் பொருளை வாடிக்கையாளனுக்கு அறிமுகம் செய்து, அதில் வெற்றி காண்பது, உதவி தேவைப்பட்ட நேரத்தில் அதற்கு பொருத்தமானவரிடம் உதவி யைக் கேட்டுப் பெற்றுக் கொள்வ தெனக் கதை சொல்கின்ற சந்தர்ப் பங்கள் ஏராளம். இங்கு நீங்கள் கதை சொல்லல் என்பதற்கு வேறெதுவுமான அர்த்தங்களை உருவகித்துக் கொள்ளக் கூடாது. கதை சொல்கின்ற ஆற்றல் ஒரு கலை. கதைகள் சொல்லப்படு கின்ற விதத்தில் தான் அதற்கான பதில்களை அழகிய முறையில் பெற் றுக் கொள்ள முடியும். நாம் சொல் கின்ற கதைகள், நாம் கேட்கின்ற கதை கள், நாம் சொல்ல நினைக்கின்ற கதை கள் எனக் கதைகளின் இருப்பு நிலை களை ஒரு வகையில் வகுத்துக் கொள்ள வும் முடியும். ஆனாலும், அது இங்கு தேவை யில்லை.

ஒரு நாடு பற்றி நாம் கேள்விப்படு கின்ற கதைகள் தான், அந்த நாடு, அந் நாட்டின் மக்கள் என அனைவர் பற் றிய எமது எண்ணங்களை புதுப் பித் துக் கொள்ள வழி சமைக்கிறன. அவர் கள் பற்றிய அனுமானங்களை நாம் பெறுகின்ற அவர்கள் பற்றிய கதைகள், செய்திகள் மூலமே செய்து கொள்கி றோம். இந்த நிலையில் கதை அதன் வலிமையைக் காட்டி நிற்கிறது. வெறும் சின்னக்கதைகள் ஒரு தலை முறையின் சிந்தனையோட்டத்தில் எவ்வாறான பாதிப்பை உண்டு பண் ணுகிறது அத்தோடு, கதைகள் சொல் லப்படாத நிலையில், தலைமுறையின் அறியாமை எந்த நிலைக்குச் செல்கின் றது என்பதை எல்லாம் உற்றுக் கவனித் தால், கதைகள் கொண்டுள்ள வலி மையை நிராசையாகவே புரிந்து கொள்ள முடியும். உண்மையிலும், உண்மையானது எது? விடை கதை என்றொரு மேற்கோள் ஞாபகத்திற்கு வருகிறது. கதையொன்றின் ஆபத்து என்ற தொனிப்பொருளில் உரையாற் றிய எழுத்தாளர் சிம்மமன்டா அடிசி யின் உரையொன்று மனித வர்க்கத்தின் அடையாளத்தில், வரலாற்று அனுமா னங்களில் என எல்லாவற்றிலும் கதை எந்தளவு தாக்கத்தைச் செலுத்துகிறது என்பதை அழகாகச் சொல்கிறது. பதி னெட்டு நிமிடங்கள் நீளமான உரை பல உண்மையான கதைகளை உங்கள் மனக்கண்ணிற்கு கொண்டு வரும். ஒவ் வொரு நிமிடமும் பொக்கிசமான கதைகள் பற்றிய ஆறுதலையும், அது தரவல்ல சக்தியையும் உங்களால் அறிந்து கொள்ள முடியும். நேரமெ டுத்து கட்டாயம் வாசியுங்கள். கதை கள் காலத்தை வெல்லக்கூடியன.







## அழகுத் துளிகள்

**■ பெண்கள் சிவப்பழகைப் பெற – இயற்கை வழிமுறை**

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம்-1, உலர்ந்த திராட்சை பழம்-10, இவற்றை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்க வேண்டும். அதை பிறகு அரைத்துக் கொள்ளுங்கள். இந்த கலவையுடன் அரை தேக்கரண்டி பப்பாளி பழக்கூழை கலந்து கொள்ளுங்கள்.

பிறகு இதை முகத்தில் பூசிக் கொள்ளுங்கள்.

20 நிமிடம் கழித்து முகத்தை கழுவி விடுங்கள். வெயிலில் முகம் கறுத்துப் போயிருந்தால், பப்பாளியானது பளபளப்பாக மாற்றி விடும்.

**■ கண் இமைகள் மற்றும் புருவம் அழகாகவும் அடர்த்தியாகவும் இருக்க..**

தினமும் இரவு கண் இமைகளிலும் புருவத்திலும் விளக் கெண்ணை தடவி வரவும். இவ்வாறு செய்து வர கண்கள் அழகு பெருகும். இது உடல் சூட்டையும் தணிக்கும்.

**■ வரண்ட சருமத்திற்கு**

தினமும் இரவில் கைகள், கால்கள், பாதங்கள் போன்ற இடங்களில் ஒலிவ் எண்ணையை தடவி வர வரண்ட சருமம் பட்டுப் போல் மாறிவிடும்.

## கவிஞர் றாஹிலின் 'நீ கேட்ட கவிதை'



புள்ளியாக இருந்த நான்
உன்னைக் கண்டதும்
எழுத்தாகி
மொழியாகி
கவிதையாகினேன்
வாசிக்காமல் போகிறாய்
நீ.........

••

ஆணாதிக்கம் பற்றி
வன்மையாகக் கண்டித்த
பெண்
கேட்டாள்
வளர்ப்பதற்கு
ஆண் பூனை
வேண்டுமென்று.

••

மொழி எதற்கு?
போதுமே
உன் கண்கள்.

••

அடுப்பு எரிக்க
தீக்குச்சி கூட
மறுக்கிறது
கண்ணீரில் நனைந்து.


••

ஆலயத்திற்குள் சென்றான்
பாவமன்னிப்புக் கேட்டான்
வெளியேறினான்
அடுத்த பாவம் செய்வதற்காக.

கவிஞர், எழுத்தாளர், அறிவிப்பாளர், தயாரிப்பாளர் என பன்முக ஆற்றல்களைக் கொண்டவர் றாஹில். அக்கரைப்பற்று நிந்தவூரைச் சேர்ந்தவர். அவரது ஏழு கவிதை நூல்கள், ஒரு சிறுகதைத் தொகுப்பு என் பன வெளிவந்துள்ளதாக அறிகின்றோம்.

இவைகளில் 'நீ கேட்ட கவிதை' நூல் எமக்குக் கிடைக்கப்பெற்றது. இக்கவிதைத் தொகுப்பிற்கு தமிழகத்தின் பிரபல புதுக்கவிஞர் மேத்தா முன்னுரை வழங்கியிருக்கின்றார்.

**படைப்பாளிகளே உங்கள் நூல்கள் குறித்த அறிமுகம் இனிது இனிது இதழில் பிரசுரமாக விரும்பினால் உங்கள் நூலின் பிரதி ஒன்றை எமக்கு அனுப்பி வையுங்கள்.**



# யார் அவர்?

ஒரே நேரத்தில், ஒரே சம்பவத்தில் இறந்து போனவர்கள் மூவரை இயமலோகத்தில் சித்திர புத்திரன் விசாரணை செய்தார். எவ்வாறு ஒரே சம்பவத்தோடு தொடர்புபட்டு மூவரும் இறந்தீர்கள் என்று அவர்களில் ஒவ்வொருவராக அழைத்துக் கேட்டார். "ஐயா நான் பத்து மாடிக் கட்டடத்திற்கு கீழாக வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தேன். உயரத்திலிருந்த பத்தாவது மாடியை பார்த்தேன். அப்போது அந்த பத்தாவது மாடியிலிருந்து ஒரு அலுமாரி என் மீது வந்து விழுந்தது. அதனால் அந்த இடத்திலேயே இறந்து விட்டேன்" என்றார் முதலாவது நபர்.

இரண்டாவது நபர் சொன்னார்.

"அந்த பத்தாவது மாடியில்தான் எனது வீடு உள்ளது. என் மனைவி மீது எனக்கு சில காலமாக சந்தேகம் இருந்தது. நானில்லாத வேளையில் அவளிடம் யாரோ வந்து செல்கிறார்கள் என்கிற சந்தேகத்தால் ஒரு நாளைக்கு அவனைப் பிடிக்க வேண்டும் என்று நினைத்தேன். ஒருநாள் நான் அலுவலகத்திற்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து வெளியே வந்தேன். அந்த சமயத்தில் யாரோ ஒருவர் எனது வீட்டுக்குள் செல்வது போல் தெரிந்தது உடனே மாடியிலேறி வீட்டுக்குள் சென்று பார்வையிட்டேன். அங்கு மனைவி மட்டுமே இருந்தாள். வேறு எவரையும் காணவில்லை. ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். கீழே வீதியிலிருந்து எனது வீட்டை ஒரு ஆசாமி நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். அந்த ஆசாமிதான் நானில்லாத வேளைகளில் இரகசியமாக எனது வீட்டுக்கு வருபவன் எனச் சந்தேகித்து கோபத்தால் அவர் மீது எனது வீட்டிலிருந்த பெரிய அலுமாரியை யன்னலூடாக தள்ளிவிட்டேன். அதில் நசிந்து அந்நபர் இறந்த காட்சியைப் பார்த்தேன் அப்போது எனக்கு இதயத்துடிப்பு நின்று விட்டது. அதனாலேயே நான் இறந்தேன்".

மூன்றாவது நபரிடம் அவர் இறந்தமைகுறித்து விசாரணை நடத்தப்பட்டது.
அவர் கூறினார்.
நான் தான் ஐயா அந்த அலுமாரிக்குள் ஒளிந்திருந்த ஆள்.

# பறவைகள் பலவிதம்

ஐந்து சென்ரி மீற்றர் நீளமும். 1.8 கிராம் எடையும் உள்ள மிகச் சிறிய பறவையான ஓசனிச்சிட் (ஹம்மிங் பறவை) பறவைகளிலிருந்து, 9 அடி உயரமும் 156 கிலோகிராம் எடையும் கொண்ட (பறக்காத) பெரிய தீக்கோழி மற்றும், ஈமியு பறவை வரை, பறவைகள் பல பரும அளவுகளிலும் உள்ளன. அதிக எடையுள்ள பறக்கும் பறவையான பஸ்டார்ட் 18 கிலோ வரை பெருக்கும். பறவைகளில் மணிக்கு 160 கி.மீ வேகத்தில் பறக்கும் இனமும் உண்டு. நிலம், நீர், வானம் இவற்றில் விரைந்து நகரக் கூடிய விலங்கினங்கள் யாவற்றினும் மிக விரைந்து செல்லக்கூடியது பறவையினத்தைச் சேர்ந்த வல்லூறுதான். சில பறவைகள் நெடுந்தொலைவிற்கு (17,000 கி.மீ) பறக்க வல்லன. பல பறவைகள், பறப்பதையே முக்கியமான சிறப்பியல்பாகக் கொண்டிருப்பினும், சில பறவைகள் பறக்க முடியாதவையாகும். மற்றும் பல இனங்கள், குறிப்பாக தீவுகளில் வசிப்பவை பறக்கும் இயல்பை இழந்துவிட்டன. பறக்க முடியாத பறவைகளுள், பென்குயின்கள், தீக்கோழிகள், நியூசிலாந்தின் கிவிக்கள் மற்றும் அழிந்துபோன டோடோக்கள் என்பன அடங்குகின்றன. பாலூட்டிகள் இன்மைஅல்லது குறைவு என்ற சூழலில் (நியூசிலாந்து முன்பிருந்தது போன்ற சூழலில்) பறவைகள் பாலூட்டிகளின் சுழற்கூறை நிரப்பத் துவங்குகின்றன. இந்தப் படிமலர்ச்சியின் போது பறக்கும் தன்மையை அவை விடுக்கக் கூடும். மனிதர்கள் அல்லது மனிதர்களால் அறிமுகப்படுத்தப்படும் விலங்குகள் பறக்க முடியாத பறவைகளின் வாழிடங்களுக்குள் வரும் போது, இப்பறவைகள் அழிந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகம். பெரிய ஒக், பறக்கமுடியாத ரெய்ல் எனப்படும் ரால்லிடேக்கள் (Rallidae) நியூசிலாந்தின் மோவாக்கள் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பறவைகளின் உள்ளமைப்பு மற்ற வகைகளின் கலவையாக உள்ளது. பறவைகள் முதுகெலும்புள்ளவை. பாலூட்டிகளைப் (Mammals) போல நான்கு அறை இதயத்தையும் வெதுவெதுப்பான இரத்தத்தையும் கொண்டவை. இதன் காரணமாக சீரான தன் உடல் வெப்பத்தையும், வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழும் தன்மையும் பெறுகின்றன. ஆனால் ஊர்வன (Reptiles) போன்று முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. பறவைகளின் சிறகுகளில் உள்ள முக்கிய பொருள் கெரோட்டின். நமது தலைமுடி, விரல் நகம் அகியவற்றில் உள்ள அதே கெரோட்டின்தான். ஆனால், நமது தலைமுடி, நகங்களைப் போல் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போகாமல் ஓர் அளவுடன் நின்று விடும். இதனால் பெரும்பாலும் வளர்ந்த பறவைகள் வருடம் ஒரு முறையாவது சிறகுகளை உதிர்த்து புதுப்பித்துக் கொள்ளும். இந்த சிறகுகள் எடை குறைவானது. ஆனால், வலுவான பறப்பதற்கேற்ற 'ஏரோடைனமிக்' மேற்பரப்பை பறவைகளுக்கு அளிக்கிறது. பறக்கும் போது சிறகுகள் இடையே சிறு சிறு காற்று பொட்டலங்கள் ஏற்பட்டு மிக வெப்பம், குளிர் ஆகியவற்றிலிருந்து பறவைகளைக் காக்கிறது. பறவைகள் பெரும்பாலும் கூரிய பார்வை உடையவை. ஒரு கண்ணுக்கு மூன்று இமைகள் இருக்கும். மேல் இமை மனிதர்களின் கண் இமையைப் போன்றது. கீழ் இமை தூங்கும் போது மட்டும் மூடிக்கொள்ளும். இது தவிர பக்கவாட்டில் அலகின் அருகிலிருந்து துவங்கும் ஒரு மெலிதான தோல் உண்டு. இது ஒளி ஊடுருவக்கூடிய தோல், கண்களை



ஈரப்படுத்தவும், காற்று, அதிக வெளிச்சம் ஆகியவற்றிலிருந்து பாது காக்கவும் உதவுகிறது. பறவைக்கு காது மிக முக்கியமானது. ஆனால், முழுவதும் உள்புறமாகவே அமைந்துள்ளது. கண்ணுக்குச் சற்று கீழே சிறிய துளை இருக்கும். பெரும்பாலும் சிறிய இறகுகளால் மூடப்பட்டிருக்கும். பறவைகளுக்கு காது ஒலியைக் கேட்பதற்காக மட்டுமல்லாமல் பறக்கும் போது சமநிலைப்படுத்தவும் தேவைப்படுகிறது.



பறவைகளின் மூளை பலவிதங்களில் முழுமைபெற்றது. பறக்கும் போது விமானத்தைப் போல உடலில் அனைத்து இயக்கங்களின் ஒருங்கிணைப்பு, உள்ளுணர்வு, உடனடியாக உணர்ந்து கொண்டு திசை மாறுதல் போன்றவற்றை அது செயல்படுத்துகிறது. பறவைகளின் அறிவுத் திறனும் வியப்பூட்டுமாறு சிறப்பாக உள்ளது. மனித மூளையில் உள்ள சிந்திக்கும் பகுதியான செரிபெரல் கோர்டெக்ஸ் (Cereberal cortex)பறவைகளில் மிகப் பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. ஆனால் ஹைபரஸ்ட்ரியாடம் (Hyperstriatum) என்னும் மனிதர்கள் மற்றும் பிற பாலூட்டிகளில் இல்லாத ஒரு பகுதி பறவைகளின் மூளையில் உள்ளது. இந்த பகுதியே பாடும் பறவைகள் பாட்டுக்களைக் கற்றுக் கொள்ள உதவுகிறது. பறவைகளின் அறிவுத்திறனுக்கும் இதுவே காரணமாக இருக்கலாமென்று அறிவியலாளர்கள் கருதுகிறார்கள். பறவைகளின் உணவு முறைக்கேற்ப அலகுகள் அமைந்துள்ளன. வானம்பாடி போன்ற, மலர்களில் தேன் குடிக்கும் பறவைகளுக்கு நீண்ட நுண்ணிய அலகு. கழுகு, ஆந்தை போன்ற அசைவப் பறவைகளுக்கு சதையைப் பிய்த்து உண்ண ஏற்ற உறுதியான கூர் அலகு. மீன்களை











உண்டு வாழும் வாத்து போன்ற பறவைகளுக்கு வழுக்கும் இரையை பிடிக்க ஏற்றதான ரம்பம் போன்ற விளிம்புடைய அலகு. பழக் கொட்டைகளை உடைக்க உறுதியான அலகு, மரங்கொத்திப் பறவைக்கோ உளி போன்ற உறுதியும் கூர்மையும் கொண்ட அலகு. பறவைகள் வாழ்நாளில் பெரும்பகுதியை இரை தேடவும், அதனை உண்ணவுமேசெலவழிக்கின்றன. அதிக எடை பறப்பதற்கு இடைஞ்சல் என்பதால் பறவைகளால் உடலில் உணவைச் சேமித்து வைக்க இயலாது. சிறிய பறவைகள் அடிக்கடி உண்பது அவசியமாகிறது. பறவைகளில் சைவமும் அசைவமும் உண்டு. காகம் போன்றவை இரண்டையுமே உண்கின்றன. சில பறவைகள் சிறப்பு இரைகளைக் கொண்டுள்ளன. உதாரணமாக, எவர்கிளேட் கைட் என்ற பறவை நத்தைகளை மட்டுமே உண்ணும். பறவைகளின் வயிறு சிறப்புத் திறன் பெற்றவை. கடினமான கொட்டைகள் போன்றவற்றைக் கூட நொறுக்கி செரிமானம் செய்துவிடும். சில பழக்கொட்டை உண்ணும் பறவைகள் அதனோடு சேர்த்து சிறிய கூழாங்கற்களையும் தின்கின்றன. வயிற்றில் உள்ள சாப்பிட்ட கொட்டைகளை நொறுக்க வசதியாகத் தான்! குஞ்சுகளுக்கு இரை எடுத்துச் செல்ல பல பறவைகள் வாய்க்குள் சிறிய பை போன்ற உறுப்புக்களைக் கொண்டுள்ளன. இரவில் வேட்டையாடும் ஆந்தை போன்றவற்றைத் தவிர பெரும்பாலான பறவைகள் பகலில் விழித்து இரவில் உறங்குகின்றன. குஞ்சு பொரிக்கும் காலங்களில் மட்டுமே கூட்டில் உறங்குகின்றன. மற்ற நேரங்களில் கிளையோ, மரப் பொந்தோ, சில சமயம் ஒற்றைக் காலிலோ கிடைத்த இடத்தில் உறங்கிக் கொள்ளும். அவைகளுக்கு மனிதனைப் போல நீண்ட நேரத் தூக்கம் தேவைப்படுவதில்லை, மூளைக்கு ஓய்வளிப்பதற்காகக் உறங்குவது மில்லை. தசைகளை தளர்த்தவும், சக்தியைச் சேமிக்கவும் மட்டுமேதூக்கம் தேவைப்படுகிறது. பெரும்பாலான பறவைகள் வாழ்நாளில் அல்லது

குறைந்தது ஒரு கூடல் காலத்திற்காவது ஒரே இணையுடன் வாழ்பவை. வழக்கம் போல் இதிலும் சில விதிவிலக்குகள் உண்டு. பாடுகின்ற பறவைகள் பாட்டாலேயே தங்கள் துணையைப் பிடிக்கின்றன. பெரும்பாலும் சத்தமாக நீளமாக பாடும் ஆணின் பாட்டிற்குத் தான் பெண் மயங்கி வந்து சேரும். மற்ற பறவைகள் தங்கள் இறகு அலங்காரத்தால் துணையை அசத்துகின்றன. ஆண், பெண் இரண்டுமே முட்டையை அடைகாப்பதுண்டு. வெளிவரும் குஞ்சுகளில் பொதுவாக 10 வீதமானவை மட்டுமே ஓர் ஆண்டு கடந்தும் உயிர் வாழ்கின்றன.



இடப்பெயர்ச்சி பறவைகள் புலப்பெயர்வு உணவுத் தேவைகளுக்காகவும் மிக வெப்பம், மிகவும் குளிர் கால நிலைகளை தவிர்ப்பதற்காகவும் பறவைகள் வருடாந்தம் இடப்பெயர்ச்சி செய்கின்றன. கடற் பறவைகள் மிக அதிக தூரம் (சில வகைகள் ஒரு வருடத்தில் 32,000 கிமீ வரை) பயணிக்கின்றன. இடப்பெயர்ச்சி செய்யும் போது அது பல அடையாளங்களைக் கொண்டு சரியான இடத்திற்குச் சென்று சேர்கின்றன. பகலில் சரியனான திசையைக் கொண்டும், இரவில் சில நட்சத்திரங்களை அடையாளமாகக் கொண்டும், பூமியின் காந்த அலைகளைக் கொண்டும், சில நில அடையாளங்களைக் கொண்டும், சில தனிப்பட்ட ஒலி வேறுபாடுகளைக் கொண்டும் பாதையை உணர்ந்து கொள்கின்றன. பறவைகள் கூட்டமாகச் செல்லும் போது A போன்ற வடிவத்தில் பறப்பதைப் பார்த்திருக்கலாம். இவ்வாறு செல்லும் போது முதல் பறவையைத் தவிர மற்ற எல்லாப் பறவைகளும் முன்னால் செல்லும் பறவையின் இறக்கை வீச்சில் உருவாகும் காற்ற ழுத்தம் காரணமாக எளிதாக பறக்கின்றன. தனியே பறந்து செல்லும் முன்னனுபவமில்லாத சில இளம் பறவைகள் சமயங்களில் வழி தப்பி அதன் இனம் செல்லும் வழக்கமான வழியை விட ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் தள்ளி வந்து விடுவதையும் காணலாம். விஞ்ஞானிகள் தொன்மாக்களிலிருந்து பறவைகள் தோன்றினவா என்று ஆய்ந்திருக்கிறார்கள். டைனோசரின் ஒரு வகையான தெரொபோட் (Theropod) இனத்திலிருந்து பறவைகள் தோன்றின என்று ஒரு சாராரும், அதற்கு முன்பே 'தெகோடோன்ட்' இலிருந்து (Thecodont) (இது டைனோசரின் மரபுவழி முன்னோடி) பறவைகள் உருவானது என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். பறவைகளின் படிமலர்ச்சி (பரிணாம வளர்ச்சி) பற்றிய ஆய்வுகளில் தொல்லுயிர் படிவங்கள் பெரிதும் துணையாயிருக்கின்றன. இவற்றுள் 1861ஆம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள பவேரியாவில் ஒரு சுண்ணாம்புக் காளவாயில் கிடைத்த புதைபடிவம் குறிப்பிடத்தக்கது. அது 14 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தொல்சிறகி (Archeopteryx) என்ற பறவையினுடையது. வாயில் பற்கள், அசைக்கத்தக்க மூன்று விரல்கள், சிறகில் நகங்கள் என மரக்கிளைகளில் தொற்றித்தாவும் வசதிகளையும் பெற்றிருந்த அவ்விலங்கு தொன்மாக்களுக்கும் இன்றைய பறவைகளுக்கும் இடைப்பட்ட படிமலர்ச்சி நிலையில் இருந்திருக்கக் கூடும்.







பறப்பதைப் பற்றியும் இரு கருத்துக்கள் உள்ளன. பறவைகளின் முன்னோர்கள் மரத்துக்கு மரம் தாவி அப்படியே பறக்கத் துவங்கினர் என்று சிலர் சொன்னாலும், நிலத்திலிருந்து இரைக்காகவும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் தாவித் தாவி பறக்கத் துவங்கியதாகப் பொதுவாக நம்புகின்றனர். இவ்வாறு இரு கருத்துக்கள் இருந்தாலும் க்ரெடாசியஸ் (Cretaceous) யுகத்தில், அதாவது 138 மில்லியன் ஆண்டுகள் முன்பிலிருந்து 65 மில்லியன் வருடங்கள் முன்பு வரை உள்ள காலகட்டத்தில், பறவைகள் இருந்ததற்கான சான்றுகள் கிட்டியுள்ளன.










உறுதி • நவீன வடிவங்கள் • அழகிய நிறங்கள்

# லக்சுமி ஓகனைஷேசன்

**Lukshmee Organization**

(வட மாகாண ஏக விநியோகஸ்தர்)

இல. 25, 4ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு : 021 222 7167

GATEWAY CfICT

UTHAYAN IT ISLAND
# GATEWAY CENTRE


FAST TRACK TRAINING PROGRAMME

We inspired
We GATEWAY

- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967



CfICT GATEWAY · GATEWAY Language Centre · GATEWAY KIDS · IPICT · ICDL · e-Citizen · e-TYPE

'இனிது இனிது' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது.
இல. 38 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP : 021 567 7222